பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 07 வியாழக்கிழமை 24.10.2024 கதிர் 351

### இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சி அக்கப்போர் வெளியே தெரியவில்லை என்றாலும் தேர்தல் களத்தில் வெகு மும்முரமாகச் சுழன்றடிக்கின்றது என்பதை அறிய முடிந்தது. சமூக ☞ 2

# சுற்றுலாவிகளைப் பாதுகாக்க விசேடமான வேலைத் திட்டம்

## பொலிஸார் அறிவிப்பு

மத்தியகிழக்குமற்றும்கிழக்குஐரோப்பாவில் நிலவும்போர்நிலைமையைக்கருத்திற்கொண்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காக விசேட வேலைத் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுப் பாதுகாப்புஅமைச்சின்ஆலோசனைக்கமைய இந்த விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சுற்றுலாத் தலங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு அடிக்கடி வரும் நகரங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெலிகம, பண்டாரவளை மற்றும் எல்ல உள்ளிட்ட பல நகரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை இலங்கையில் இருக்கின்ற வெளிநாட்டவர்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகப் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவும் அறிவித்துள்ளார்.

அறுகம்மையில் இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்தப்படக்கூடிய ஆபத்து இருப்பதால் தனது நாட்டு சுற்றுலாவிகளை இலங்கையைவிட்டு வெளியேறுமாறு ☞ 2

# ஜோன்டனுக்கு ஒக். 30 வரை விளக்கமறியல்

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை ஒக்டோபர் 30 வரையில் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பில் அதிசொகுசு விடுதி ஒன்றின் வாகனத் தரிப்பிடத்தில் இருந்து ☞ 8

# சிறீரங்காவுக்கு முன்பிணை வழங்க மறுப்பு

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம்.மிஹுறாலுக்கு எதிராக கொழும்பில் அவதூறு சுவரொட்டியை அச்சிட்டு ஒட்டிய சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படுபவரான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீ ரங்காவுக்கு முன்பிணை வழங்க ☞ 8




# அறுகம்பை தாக்குதல் எச்சரிக்கை குறித்து முழுமையாக விசாரிக்குக

## அசாத் சாலி கோரிக்கை

கிழக்கு மாகாணம் அறுகம்பையில் சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளது என்ற தகவல் குறித்து ஆளும் தரப்பு முழுமையாக விசாரணை நடத்தவேண்டும் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மேல்மாகாண முன்னாள் ஆளுநருமான அஸாத் சாலி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்துக்கு அண்மையில் கிடைக்கப்பெற்றுள்ள நம்பகரமான தகவலுக்கமைய, அறுகம்பை பிரதேசத்தில் பிரபல்லியமான சுற்றுலா இடமொன்றை இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமையை உடனடியாக விசாரணை செய்து பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தகவல் நம்பகரமான இடமொன்றில் இருந்து வெளியாகி இருக்கும் நிலைமை ☞ 8

# பலஸ்தீனம் தொடர்பில் ஜேவிபி இரட்டை நிலைப்பாடு

## அஸாத் சாலி குற்றச்சாட்டு

இஸ்ரேலை கண்டித்து ஐக்கிய நாடுகள் சபை கொண்டுவந்த தீர்மானத்தை இலங்கை அரசு நிராகரித்துள்ளதன் மூலம் பலஸ்தீனம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் இரட்டை நிலைப்பாட்டை தெரிந்துகொள்ளலாம் என புதிய ஜனநாயக முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் அஸாத் சாலி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் நாட்டிற்குள் நுழைய இஸ்ரேல் தடைவிதித்துள்ளதை கண்டித்து 105 நாடுகள் இணைந்து வெளியிட்ட கூட்டுக் கடிதத்தில் கையொப்பமிட இலங்கை மறுத்துவிட்டது. இதன் மூலம் பலஸ்தீனம் ☞ 2

# ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி பிரதமரை சந்தித்து பேச்சு

ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே ஃபிரான்ச் (MarcAndre Franche) பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரியவை நேற்றுப் பிரதமர் அலுவலகத்தில் சந்தித்துப் ☞ 8

# எல்பிட்டிய தேர்தல் பரப்புரை நிறைவு

எல்பிட்டிய பிரதேசசபை தேர்தலுக்கான அனைத்து பிரசார நடவடிக்கைகளும் நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்துள்ளன.

ஒக்டோபர் 26 வாக்குப்பதிவு நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்படும் வரை பரப்புரை நடவடிக்கைகளுக்கு ☞ 2

# இஸ்ரேலியர்களைக் கொழும்புக்கு நகருமாறு அந்த நாடு அறிவுறுத்து

இலங்கையின் அறுகம்பை உட்பட தெற்கு மற்றும் மேற்குக் கடற்கரைப் பகுதிகளில் இருந்து தனது மக்களை வெளியேறுமாறு கேட்டுக்கொண்டுள்ள இஸ்ரேலின் தேசிய பாதுகாப்பு பேரவை அவ்வாறு வெளியேறியவர்கள் இலங்கையிலிருந்து வெளியேறவேண்டும் அல்லது தலைநகருக்கு செல்லுங்கள் என ☞ 8

# மட்டக்களப்பில் இருவர் கைது

மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தை அண்மித்த பகுதியில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய சந்தேகத்தில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருணாகல் சேர்ந்த இந்த இருவரும் ☞ 2

# அநுரகுமார மக்களை ஏமாற்றிவிட்டார் எனவே பலமான எதிர்க்கட்சி வேண்டும்

## திலித் ஜயவீர தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க தேர்தலின்போது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் மக்களை ஏமாற்றியுள்ளார். எனவே ஜனாதிபதியின் முறையற்ற செயற்பாடுகளை எதிர்க்கும் பலமான எதிர்க்கட்சித் தோற்றம் பெறவேண்டும்.

என்று தொழிலதிபரும், பொதுத்தேர்தல் வேட்பாளருமான திலித் ஜயவீர தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள மவ்பிம ஜனதா கட்சி காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல் பரப்புரை மேடைகளில் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு அறிக்கைகளை அப்போதைய ஜனாதிபதி மறைத்து வைத்திருக்கிறார் என்று குறிப்பிட்டார். அவர் ஜனாதிபதியானால் அந்த ☞ 8

# வடக்கு உற்பத்திகளுக்கான சந்தையை பெற உதவுங்கள்

## அமெரிக்க தூதரிடம் ஆளுநர் கோரிக்கை

வடக்கில் காணப்படும் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கைக்கான அமெரிக்க தூதுவரிடம் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகம் கோரிக்கை விடுத்தார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனை நேற்றுச் ஆளுநர் பணியிடத்தில் சந்தித்துப் பேசினார்.

வடக்கு மாகாண அபிவிருத்தி செயற்பாடுகள், கல்வி, சுற்றுலாத்துறை, காணி விடுவிப்பு, போக்குவரத்து வசதிகள், தொழில் வாய்ப்புகள், முதலீட்டு ☞ 8

# தொழிலாளர்களுக்கு ரூ. 25,000 முற்பணம் இன்று முதல்

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 25,000 ரூபா முற்பணம் இன்று முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

ஊடகங்களில் நேற்று தமிழ் அரசுக் கட்சியின் 8 உறுப்பினர்களின் படங்களுடனான ஒரு 'பனர்' சுற்றுக்கு விடப்பட்டிருந்தது. அதில் வேட்பாளர் சிறீதரனின் படம் மட்டும் இல்லை. உடனே சீறிதரன் வீட்டுக்குள் இருக்கிறாரா இல்லையா என்று தொடங்கி ஏகப்பட்ட விமர்சனங்கள்.

அதில் நடுநாயகமாக சுமந்திரனின் பெரிய படமும் சுற்றிவர ஏனைய 7 பேரின் படங்கள் சிறிய அளவிலும் போடப்பட்டிருந்தன. பார்த்த மாத்திரத்திலேயே சுமந்திரனும் அவரது ஆதரவாளர்களும் என்று அடையாளப்படுத்தப்படக்கூடிய வகையில் அமைந்திருந்தது வடிவமைப்பு. ஏனோதானோ என்றில்லாமல் நேர்த்தியான வடிவமைப்பு. பார்த்தால் தேர்தல் பரப்புரைக்காகவென்றே செய்தது போன்ற வடிவமைப்பு.

இருந்தாலும் சிறீதரனின் படம் மட்டும் அதில் இல்லாமல் இருப்பது நெருடவே சுமந்திரன் தப்பினரில் ஒருவரைத் தொடர்புகொண்டேன். அவர் முதலில் அதைப் பார்த்திருக்கவில்லை. நான் எடுத்த எடுப்பிலேயே "ஏன் சிறீதரனை மட்டும் விட்டுவிட்டீர்கள்?" என்று கேட்டதும் "ஏன் அண்ணை! எங்கையண்ணை" என்று அவர் பதற்றமாகிவிட்டார். விடயத்தைத் தெளிவுபடுத்தியதும். ''அப்படியொன்றும் நாங்கள் செய்யவில்லையே, சற்றுப்பொறுங்கள் பார்த்துவிட்டுச் சொல்கின்றேன்'' என்றார். பார்த்துவிட்டு மீண்டும் அழைப்பெடுத்தார்.

பொரிந்து தள்ளிவிட்டார். ''இந்தப் படத்தை நாங்கள் உருவாக்கவுமில்லை. வெளியிடவும் இல்லை. இதை அவர்களேதான் செய்திருப்பார்கள். மற்றவர்களுடன் இல்லாமல் தான் மட்டும் தனித்துநிற்பதாகக் காட்டுவதுதான் அவர்களின் பரப்புரை உத்தியாகவே இருக்கிறது. அவர்கள் தாங்கள் தனியே நடத்துகிற கூட்டங்களில் எல்லாம், தமிழ் அரசுக் கட்சிக்கு ஒரு ஆசனம் கிடைத்தால் போதும், அப்படிக் கிடைத்தால் மட்டும்தான் தமிழ் அரசுக் கட்சியைக் காப்பாற்றலாம் என்று சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். இந்தப் படத்தையும் அதற்காக அவர்களேதான் உருவாக்கி விட்டிருப்பார்கள்'' என்றார்.

என்ன கொடுமை சரவணா இது?

.................

அறுகம்பேயில் சுற்றுலாவிகள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சம் பரவி பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மேற்குக் கரையின் புத்தளம், நுரைச்சோலையில் உள்ள லக்விஜய மின் உற்பத்தின் நிலையத்தின் மீது பறந்த 'ட்ரோன்' ஒன்று தொடர்பான தீவிர விசாரணைகளையும் பொலிஸார் தொடங்கியுள்ளனர்.

இந்த 'ட்ரோன்' நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் மீது பறந்துகொண்டிருந்தபோது திடீரென கோளாறாகி மின் உற்பத்தி நிலையத்திற்குள்ளேயே நேற்றுப் பிற்பகல் அளவில் வீழ்ந்துவிட்டதனால் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த ஆளில்லா பறப்பியந்திரத்தில் பொருத்தப்பட்டிருக்கும் கமெரா மூலம் லக்விஜய மின் உற்பத்தி நிலையப் பகுதி படமாக்கப்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்பு தரப்பினர் சந்தேகப்படுகின்றனர். அனுமதியின்றி ஆலைக்கு மேலே ட்ரோன் கேமராவை பறக்கவிடுவது சட்டவிரோதம் என்ற நிலையில் இதனை யார் பறக்கவிட்டார்கள் என்ற விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

கிழக்குக் கரையில் பயங்கரவாதத் தாக்குதல் நடக்கலாம் என்கிற பதற்றம் இருக்கும்போது மேற்குக் கரையில் நாசச் செயல்களில் ஈடுபடும் நோக்கத்தோடு இந்த 'ட்ரோன்' பறக்கவிடப்பட்டதா என்கிற சந்தேகத்தோடு படையினர் விசாரணைகளைத் தொடங்கியுள்ளனர்.

.......................

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து காணாமற்போன வாகனங்களையே இன்னும் தேடிக் கண்டுபிடிக்க முடியாத நிலையில், மேல்மாகாண சபையின் சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு சொந்தமான 87 வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மேல்மாகாண தலைமை செயலகத்திற்கு சொந்தமான 13 வாகனங்களையும் காணவில்லை என்று தகவல் வெளியாகி இருக்கின்றது. கணக்காய்வாளர் நாயகத்தின் அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

மேல்மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் என்ற பெயரில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட 87 வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் எங்கிருக்கின்றன என்பதை உறுதிப்படுத்த முடியாதிருப்பதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேல்மாகாண சபையின் பிரதம செயலாளரின் பெயரில் மோட்டார் போக்குவரத்துப் பிரிவில் பதிவு செய்யப்பட்ட 13 வாகனங்கள் இருக்கும் இடத்தையும் உறுதிப்படுத்த முடியவில்லை என்று கணக்காய்வு அறிக்கை கூறுகின்றது.

அதிகாரிகள் அரச சொத்துக்களைத் துஸ்பிரயோகம் செய்து அரச வாகனங்களை தமது குடும்பத்தினரின் சொந்தத் தேவைகளுக்காக வீடுகளில் நிறுத்தி வைத்துப் பயன்படுத்தினர் என்பது கடந்த காலங்களில் தெரிந்த நிகழ்வுகள்தான். வடக்கு மாகாணத்திலேயே அப்படிப்பட்ட பல நிகழ்வுகள் நடந்துள்ளன. ஆனால், வாகனங்களையே ஆட்டையைப் போட்ட சம்பவங்கள் இப்போதுதான் வெளியே வருகின்றன. அந்த வாகனங்களை என்னதான் செய்திருப்பார்கள்?

**இடிமின்னல்**

(idiminnal@gmail.com)

## சுற்றுலாவிகளைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது கொழும்புக்குச் செல்லுமாறு இஸ்ரேல் அறிவித்ததைத் தொடர்ந்து சுற்றுலாவிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வேலைத் திட்டத்தை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இலங்கையில் சுற்றுலாவிகள் மீது பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்பது அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

## பெருந்தோட்டத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

தமிழர்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றாக தீபாவளி கொண்டாடப்படுகிறது. அதனை முன்னிட்டு பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு முற்பணமாக 25,000 ரூபாய் வழங்கவேண்டும் என பெருந்தோட்ட நிறுவனங்களுடன் இ.தொ.கா. பேச்சு நடத்தியுள்ளது.

அந்தற்குத் தோட்டக் கம்பனிகள் இணக்கம் தெரிவித்ததை அடுத்து நாளை (இன்று) முதல் முற்பணமா 25,000 ரூபாய் வழங்கப்படவுள்ளது என்றார்.

## எல்பிட்டிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைவிதிக்கப்படுவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் நேற்று நள்ளிரவிற்கு பின்னர் பரப்புரையில் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும் என ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பலஸ்தீனம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் இரட்டை நிலைப்பாட்டை தெரிந்துகொள்ளலாம்.

உலக அரங்கில் பலதரப்பு சமாதானம் மற்றும் நீதியை ஆதரிப்பதில் நீண்ட மற்றும் பெருமையான வரலாற்றை இலங்கை கொண்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையில் பலஸ்தீனத்திற்கான நமது உறுதியான ஆதரவு உட்பட மோதலைத் தீர்ப்பதற்கும் ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும் சர்வதேச முயற்சிகளுக்கு நமது நாடு தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது.

அத்துடன் பலஸ்தீனில் இஸ்ரேல் இராணுவத்தினர் முன்னெடுத்துவரும் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகள் சிறுவர்கள் மற்றும் சிவிலியன்களை இலக்குவைத்து மேற்கொண்டுவரும் தாக்குதல்களைக் கண்டித்து நாங்கள் போராட்டம் நடத்தும்போது, மக்கள் விடுதலை முன்னணியும் எங்களுடன் இணைந்து இஸ்ரேலுக்கு எதிராக செயற்பட்டுவந்தது. பலஸ்தீன மக்களின் சுதந்திரத்துக்காக குரல்கொடுத்து வந்தார்கள். ஆனால் இஸ்ரேலை கண்டித்து ஐக்கிய நாடுகள் சபை கொண்டுவந்துள்ள தீர்மானத்தில் கைச்சாத்திட இன்று மறுத்துவிட்டார்கள்.

அதிகாரத்துக்கு வருவதற்கு முன்னர் பலஸ்தீன மக்களின் உரிமைக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்பதாக தெரிவித்துவந்த ஜேவிபி, தற்போது அரச அதிகாரத்துக்கு வந்ததுடன் பலஸ்தீன் தொடர்பில் தங்களின் கொள்கையை

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# ஜனவரி முதல் அரச பணியாளர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கவேண்டும்

## ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்து

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு நிதியமைச்சர் என்ற ரீதியில் தாம் எடுத்த அமைச்சரவை தீர்மானத்தை உடனடியாக அமுல்படுத்தவேண்டும், ஜனவரி முதல் அரச பணியாளர்களின் சம்பளத்தை அதிகரிக்கவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

தாம் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் சம்பள அதிகரிப்பை வழங்க திட்டமிட்டிருந்தார் எனவும், சம்பள அதிகரிப்பை வழங்க முடியாவிட்டால், அதற்காக ஒதுக்கப்பட்ட பணம் எங்குள்ளது என்பதை ஆளும்தரப்பு உடனடியாக வெளிப்படுத்தவேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களின் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார். கொழும்பு மால் வீதியிலுள்ள புதிய ஜனநாயக முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தும் அமைச்சரவையின் தீர்மானம் அரசமைப்புச் சட்டத்தின் 43ஆ-வது பிரிவின்படி சட்டபூர்வமான-து. அனைத்து அரச ஊழியர்களிடமிருந்தும் பெறப்பட்ட கோரிக்கைகளை பரிசீலித்தே சம்பள உயர்வு வழங்கினோம். 2022 ஆம் ஆண்டளவில், மக்களின் ஊதிய மதிப்பு ஐம்பது சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. அதனால் அவர்கள் துன்பப்பட்டார்கள். சிலர் சம்பளத்தை இருபதாயிரம் ரூபாய் வரை உயர்த்தச் சொன்னார்கள்.

2024இல் சம்பளத்தை பத்தாயிரம் ரூபாய் உயர்த்தினேன். ஆனால் அந்த பத்தாயிரம் ரூபாய் போதாது. பணத்தின் மதிப்பு 50 சதவீதம் குறையும்போது, சில குழந்தைகள் காலை உணவு இல்லாமல் பள்ளிக்கு வந்துவிடுகிறார்கள். நல்லதோ கெட்டதோ இன்று 'டியூஷன்' வகுப்புகளுக்கும் செலவிடவேண்டியிருக்கிறது.

இந்த சமூக அமைப்புகள் சிதைவதை நான் விரும்பவில்லை. இதன்படி, அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஆராய உதய செனவிரத்ன குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு முடிவெடுக்க மூன்று மாதங்கள் அவகாசம் கொடுக்கப்பட்டது. ஆனால் அதற்கு முன்னரே குழு அறிக்கை அளித்தது. இது குறித்து குழுவின் தலைவர் உதய செனவிரத்னவிடம் கேட்டேன். இது பெரிய பிரச்சனை என்பதால் அதற்கு உதவ வேண்டியது தமது கடமை என்று அவர் குறிப்பிட்டார்.

அரச பணியாளர்களின் ஊதியத்தை அதிகரிக்க எவ்வளவு பணம் செலவாகும் என்று கேட்டேன், அவர் சொன்ன தொகையை வழங்க முடியுமா என்று கருவூலச் (திறைசேரி) செயலாளரிடம் கேட்டபோது, அவ்வளவு பணத்தைக் கொடுக்க முடியாது என்றனர். அந்த விடயத்தை உதய செனவிரத்னவிடம் தெரிவிக்குமாறு கூறினேன். மேலும் ஜனாதிபதியின் செயலாளருடன் கலந்துரையாடி உரிய சம்பள அதிகரிப்புக்கான பணத்தை எவ்வாறு பெறுவது என்பதைகக் கண்டறியுமாறும் கூறினேன்.

பின்னர், பேச்சு நடத்தி உடன்பாடு ஏற்பட்டதாகவும், ஒரே ஆண்டில் சம்பள உயர்வை வழங்காமல், ஐம்பது சதவீதத்தை ஓராண்டிலும், மீதி ஐம்பதை மறுவருடத்திலும் வழங்க முடியும் எனவும் தெரிவித்தனர்.

அப்போது எனது செயலாளராக இருந்த சமன் ஏக்கநாயக்கவுடனும் எனது பொருளாதார ஆலோசகர் கலாநிதி சமரதுங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோருடனும் கலந்துரையாடினேன். இறுதியில் இந்த சம்பள உயர்வை வழங்குவதற்கான உடன்பாட்டுக்கு வந்தோம்.

அதன்படி அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை நான் சமர்ப்பித்தேன். அந்த அமைச்சரவை பத்திரத்தில் ஜனாதிபதி என்ற முறையில் நான் கையெழுத்திட்டுள்ளேன், இந்தத் தீர்மானத்திற்கு கருவூலத்தின் கருத்துக்கள் தேவையில்லை.

கூட்டு முடிவு என்ன என்பதை சுருக்கமாகக் கூறுவதற்கு அமைச்சர்கள் குழுவின் தலைவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அது அமைச்சர்கள் குழுவின் செயலகத்தால் குறிப்புகளில் பரிந்துரைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது

அதாவது அமைச்சரவையின் தலைவரால் முடிவெடுப்பதற்கு நாங்கள் வாக்குகள் கேட்கவில்லை என்பது பிரிவு 4:3இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த முடிவை நாங்கள் தெரிவித்துள்ளோம்.

4:7, கூட்டு முடிவெடுப்பதற்கான குறிப்பிட்ட ஏற்பாடுகளை தற்போதைய ஆளும்தரப்பே தீர்மானிக்க வேண்டும் என்று கூறுகிறது.

சில சமயங்களில், விஷயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கருத்துக்களுக்கு எதிர் கருத்துக்கள் வராமல் முடிவெடுப்போம். எனது நண்பர் விஜித ஹேரத் இதற்கு முன்னர் அமைச்சரவையில் இருந்ததாக நான் நினைக்கவில்லை. அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு எமது ஆளும்தரப்பு எடுத்த தீர்மானம் முற்றிலும் சட்டபூர்வமானது.

அமைச்சரவை என்பது ஒரு அமைப்பு, அந்த அமைப்புக்கு அரசியலமைப்புச் சட்டத்தின் 52ஆவது பிரிவின் கீழ் அமைச்சுக்களை நடத்துகிறது. அமைச்சரின் உத்தரவின்படி செயலாளரால் அமைச்சுக்கள் நடத்தப்படுகின்றன.

நிதியமைச்சர் என்ற வகையில் சில சமயங்களில் அமைச்சின் பிரேரணைகளுக்கு அமைவாக அமைச்சரவைக்கு பத்திரங்கள் அனுப்பப்படும்போது நான் சில சமயங்களில் அதனை ஏற்றுக்கொண்டு கையொப்பமிடுவேன். சில ஆவணங்களில் எனக்கு உடன்பாடு இல்லை என்றால், எனது கருத்தைக் கூறுவேன்.

ஜனாதிபதி என்ற வகையில், உரிய சம்பள அதிகரிப்பு தீர்மானத்தில் கையொப்பமிடும்போது, ஜனாதிபதி என்ற ரீதியில் மட்டுமன்றி, ஜனாதிபதிக்கு சொந்தமான அனைத்து அமைச்சுக்களின் அமைச்சர் என்ற ரீதியிலும் கையொப்பமிடுகின்றேன்.

நிதியமைச்சர் என்ற ரீதியில் நான் இந்த சம்பள அதிகரிப்பை சமர்ப்பித்தேன். ஜனாதிபதி என்ற வகையில் அதற்கான பத்திரத்தில் கையொப்பமிடும்போது மீண்டும் நிதி அமைச்சு என்ற வகையில் கடிதத் தலைப்புகளை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை. ஜனாதிபதியாக கையெழுத்திடுவது சட்டபூர்வமானது.

அதன்படி, உரிய அரசு ஊழியர் சம்பள உயர்வை வழங்க வேண்டும். உரிய பரிசீலனைக்கு பிறகே இந்த சம்பள உயர்வுக்கு ஒப்புதல் அளித்துள்ளோம்.

மேலும் இந்த சம்பள உயர்வை வழங்கும்போது நான் கருத்தில் கொண்ட இன்னொரு விடயமும் உள்ளது. அதாவது அடுத்த ஆண்டுக்குள் நமது நாட்டின் வருமானத்தை பன்னிரெண்டு சதவீதத்தில் இருந்து பதின்மூன்று சதவீதமாக உயர்த்த வேண்டும்.

உரிய ஊதிய உயர்வு வழங்க பணம் உள்ளது. காசு இல்லை என்று சொன்னால் அது விசித்திரமான கதை. சம்பளத்தை உயர்த்த பணம் எங்குள்ளது என்பதை அரசு விளக்க வேண்டும்.

திசைகாட்டி கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாவிட்டால் நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள்.

இந்த அரசு ஊழியர் சம்பள உயர்வை ஜனவரி முதல் அமல்படுத்த வேண்டும்.

நான் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால் டிசெம்பர் அல்லது ஜனவரி முதல் இரண்டு வாரங்களில் இந்த சம்பள உயர்வை நிறைவேற்றி ஜனவரி இறுதியில் சம்பளத்தை வழங்கவேண்டும் என்பதே எனது யோசனையாக இருந்தது. இந்த சம்பள உயர்வை இப்போது தாமதப்படுத்த முயற்சிக்காதீர்கள்.

சிங்கள வருடத்தை கொண்டாட மக்கள் கையில் பணம் இருக்க வேண்டும்.

இப்போராட்டத்தை அரச ஊழியர்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# குறைந்த வருமானம் பெறுகின்ற மக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகத்துக்கு தன்னார்வத் திட்டம்

## சவூதி நூரின் உதவியுடன்



சவூதி அரேபியா மற்றும் இலங்கைக் குடியரசு ஆகிய இருநாடுகளுக்கும் இடையிலான நீண்டகால சிறப்பான உறவுகள் அடிப்படையிலும் மற்றும் உலகெங்கிலும் உள்ள குறைந்த வருமானம் பெறும் மக்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களின் துன்பத்தைத் துடைக்க, இரு புனிதத்தளங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின் அப்துல் அசீஸ் ஆல் ஸுஊத் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முஹம்மத் பின் சாலமன் ஆல் ஸுஊத் தலைமையிலான சவூதி அரேபிய அரசு முயற்சிகள் மேற்கொள்ளுகின்றன.

அதன் அடிப்படையில், மன்னர் சல்மான் நிவாரணம்மற்றும்மனிதாபிமானஉதவிகளுக்கான மையம், 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இலங்கையின் தென்மாகாணம், அம்பாந்தோட்டை மற்றும் கிழக்கு மாகாணம், 'காத்தான்குடி' போன்றபகுதிகளில்கண்பார்வையோடு தொடர்பான நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் சவூதி நூர் தன்னார்வத் திட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது என இலங்கைக் குடியரசுக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் ஆகஹ்தானி குறிப்பிட்டார்கள்.

இந்தத் திட்டத்தில் ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்தல், அவர்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்குதல், மருந்து மற்றும் மூக்குக் கண்ணாடி வழங்குதல் மற்றும் அவர்களுக்கு சுகாதார விழிப்புணர்வு வழங்குதல் ஆகியவை அடங்கும்.

இததத் திட்டம், கடந்த காலங்களில் இலங்கைக் குடியரசு உட்பட உலகின் அனைத்து நாடுகளிலும் மன்னர் சல்மான் நிவாரணம் மற்றும் மனிதாபிமான உதவிகளுக்கான மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட திட்டங்களின் தொடராகும். இவ்வாண்டு மே மாதம் 04ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், கிழக்கு மாகாணத்தில் காத்தான்குடி பகுதிகளில் இவ்வாறான தன்னார்வத் திட்டமொன்று மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அவ்வாறே, இலங்கை குடியரசில் உள்ள உலக உணவு திட்ட அலுவலகத்திற்கு இலங்கையில் தேவையுடையவர்களுக்கு விநியோகிக்க 300 தொன் பேரீச்சம்பழங்கள் 11-06-2024 அன்று வழங்கப்பட்டன.



மன்னர் சல்மான் நிவாரணம் மற்றும் மனிதாபிமான உதவிகளுக்கான மையமானது, தான் மேற்கொள்ளும் பணிகளில், உயர்ந்த மனிதாபிமான இலக்குகளை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளை நம்பியுள்ளது. உலகில் எப்பகுதியில் இருந்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி மற்றும் நிவாரணம் போன்றவைகளை வழங்குவதை, துல்லியமான கண்காணிப்பு பொறிமுறை மற்றும் மேம்பட்ட மற்றும் விரைவான போக்குவரத்து முறைகள் மூலம் மேற்கொள்கிறது.

பயனாளி நாடுகளில் உள்ள ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள் மற்றும் அதிக நம்பகத்தன்மை கொண்ட சர்வதேச மற்றும் உள்ளூர் இலாப நோக்கற்ற நிறுவனங்களின் உதவி பெறப்பட்டு அவர்களினூடாக உதவிகளைப் பகிர்ந்தளிக்கிறது. நடைமுறைப்படுத்தப்படும்.

இம்மையத்தால் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சி நிரல்கள் பயனாளிகளுக்கும் அவர்கள் வாழும் சூழ்நிலைகளுக்கும் ஏற்ப மாறுபட்டதாக இருக்கவேண்டும் என்பது உதவிகள் வழங்கும் போது கவனத்தில் கொள்ளப்படுகிறது. நிவாரணப் பாதுகாப்பு, முகாம் நிர்வாகம், தங்குமிடம், முன்கூட்டியே மீட்பு, பாதுகாப்பு, கல்வி, நீர், சுற்றுச்சூழல் சுகாதாரம், ஊட்டச்சத்து, சுகாதாரம், மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான ஆதரவு, தளவாடங்கள் மற்றும் அவசரகால தகவல்தொடர்புகள் போன்ற நிவாரண மற்றும் மனிதாபிமானப் பணிகளின் அனைத்துத் துறைகளும் இந்த உதவியில் அடங்கும்.



மன்னர் சல்மான் நிவாரணம் மற்றும் மனிதாபிமான உதவிகளுக்கான மையமானது, பல அடித்தளங்களை அடிப்படையாகக் கொண்டு, இந்தத் துறையில் உலகளாவிய முன்மாதிரியாக இருக்க முயல்கிறது:

உலகெங்கிலும் தேவைப்படுபவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட சவூதி அரேபிய இராச்சியத்தின் அணுகுமுறையைத் தொடர்வது.

மனிதாபிமான மற்ற நோக்கங்கள் எதுவுமின்றி உதவிகளை வழங்குதல்.

நம்பகமான சர்வதேச நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுதல் மற்றும் அவற்றின் ஆலோசனைகளைப் பெறல்.

நிவாரண திட்டங்களில் பயன்படுத்தப்படும் அனைத்து சர்வதேச தரங்களையும் பயன்படுத்துதல்.

இராச்சியத்தில் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள எல்லாத் தரப்பினருத்தும் முயற்சிகளை ஒன்றிணைத்தல்.

மையத்தின் தொழிலாளர்கள் மற்றும் தன்னார்வலர்களின் தொழில்முறை மற்றும் செயல்திறன்.

உதவி தகுதியான பயனாளிகளைச் சென்றடைவதையும் மற்ற நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதையும் உறுதிசெய்யவும்.

உதவிகளில் உயர் தரம் மற்றும் நம்பகத்தன்மை பேணப்படல்.

டிசெம்பர் 31, 2024, வரையான காலப்பகுதியில், மையத்தால் செயற்படுத்தப்பட்ட திட்டங்களின் பொதுவான புள்ளி விவரங்களின்படி, உலகின் 103 நாடுகளில் மொத்தமாக 7,071,726,973 அமெரிக்க டாலர் செலவில் 3,091 திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளது. இதில் இலங்கை குடியரசில் 18 திட்டங்கள் 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் செயற்படுத்தப்பட்ட திட்டங்களும் உள்ளடங்கும்.(05)

# அவசர வெள்ள நிவாரணமாக சீனாவிடமிருந்து இலங்கைக்கு 30 மில்லியன் ரூபாய் நிதி உதவி

அண்மையில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டமக்களுக்குநிவாரணம்வழங்குவதற்காக சீனஅரசாங்கம்30மில்லியன்ரூபாவைஇலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்த இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஜென்ஹொங் இந்த உதவித் தொகையை உத்தியோகபூர்வமாக ஜனாதிபதியிடம் கையளித்தார்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசரகால நிவாரணம் வழங்குவதற்கும் வெள்ளத்தடுப்பு மற்றும் முகாமைத்துவம் தொடர்பாக எடுக்க வேண்டிய நீண்டகால உத்திகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

மேலும், எதிர்கால வெள்ள நிலைமைகளைத் தடுப்பதற்கும், அவ்வாறான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்துவதற்கும் பின்பற்றக்கூடிய நிலையான தீர்வுகள் மற்றும் வழிமுறைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அண்மையில் பெய்த கடும்மழையால், பல



மாவட்டங்களில் வெள்ள நிலைமை ஏற்பட்டது. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்ததோடு உட்கட்டமைப்பு மற்றும் விவசாயத்திற்கு பெரும் சேதம் ஏற்பட்டதாக அறிக்கைகள் தெரிவித்தன.(05)

# நிந்தவூர் கடற்கரை பகுதியில் கரை ஒதுங்கிய இராட்சத சுறா





கிழக்கு மாகாணத்தின் நிந்தவூர் கடற்கரையில் இராட்சத சுறா மீன் ஒன்று திங்கட்கிழமை காலை உயிருடன் கரை ஒதுங்கியுள்ளது. கடலுக்குச் சென்ற மீனவர்கள் இதனை அவதானித்துள்ளனர்.

இந்நிலையில், கடற்கரையில் ஒதுங்கி தத்தளித்த இராட்சத சுறா மீனை அப்பகுதி மீனவர்கள் ஒன்றிணைந்துமீண்டும் கடலுக்குள் அனுப்பி வைத்துள்ளனர்.(05)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# புதிய நெருக்கடி

இலங்கையில் தீடிரென்று மீண்டும் பயங்கரவாதத் தாக்குதல் குறித்த அச்சம் எழுப்பப்பட்டுள்ளது. அதுவும் இஸ்ரேல் தன்னைச் சுற்றியிருக்கும் முஸ்லிம் நாடுகளில் போரை நடத்திவரும் நிலையில் இலங்கை வரும் அந்த நாட்டுச் சுற்றுலாவிகளை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல்கள் நடத்தப்படக்கூடும் என்ற அச்சம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று முழுநாளும் இது தொடர்பான எச்சரிக்கைச் செய்திகளால் இலங்கை பதற்றத்திற்குள்ளாகி இருந்ததைப் பார்க்க முடிந்தது. அரசுத் தலைவர் பாதுகாப்புச் சபையைக் கூட்டி நிலமையை ஆராயுமளவிற்கு இந்த விவகாரம் கனதியானதாகவும் இருந்தது. வெறுமனே இது பாதுகாப்புச் சார்ந்த விடயமாக மட்டுமன்றி பொருளாதாரத்திலும் பெரும் தாக்கத்தைச் செலுத்தக்கூடிய விடயமாகவும் இருப்பதால் இதன் மீது கூடுதல் அக்களை செலுத்தவேண்டிய தேவை இருக்கின்றது.

தாக்குதல் அச்சம் காரணமாக அறுகம்பேயிலிருந்து தனது குடிமக்களை உடன் வெளியேறுமாறும் இலங்கையைவிட்டே வெளியேறும்படியும் குறைந்தது கொழும்புக்காவது நகரும்படியும் பயண அறிவுறுத்தல்களை இஸ்ரேல் விடுத்துள்ளது. அதேபோன்று அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா போன்ற மேற்குநாடுகளும் சுற்றுலாவிகளாக இலங்கைக்கு வந்துள்ள தமது மக்களுக்கு இவ்வாறான பயண எச்சரிக்கைகளையும் தாக்குதல் ஆபத்துக் குறித்த எச்சரிக்கைகளையும் விடுத்துள்ளன.

இலங்கைக்கு வரும் சுற்றுலாவிகளில் இந்த நாடுகளில் இருந்து வருபவர்கள் கணிசமானவர்கள் என்பதுடன், அதிகளவில் இலங்கைக்கு வருமானம் அளிக்கும் சுற்றுலாவிகளில் முதன்மை இடத்தையும் இவர்களே பெறுகின்றார்கள். எனவே இவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கைகளால் இந்த நாடுகளில் இருந்து வரக்கூடிய சுற்றுலாவிகளின் எண்ணிக்கையில் கணிசமான வீழ்ச்சி ஏற்படும். இது பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பையும் ஏற்படுத்தும்.

தன்னைச் சுற்றி இருக்கும் நாடுகளில் இஸ்ரேல் அப்பாவி முஸ்லிம் மக்களைக் கொன்று குவித்து வரும் நிலையில், தனது மக்கள் வேறு நாடுகளில் தீவிரவாதிகளால் குறிவைக்கப்படக்கூடும் என்று அது அஞ்சுவதில் ஒரு நியாயம் இருக்கவே செய்கின்றது. எனினும் அந்த அச்சத்தால் அதிகம் பாதிக்கப்படும் நாடாக இலங்கை மாறப்போவது அபத்தம். இஸ்ரேலின் செயல்களுக்கான விளைவை இலங்கையின் மக்கள் அனுபவிப்பது என்பது வேதனையான விடயம்.

ஏற்கனவே அரிசி உட்படப் பொருள்களின் விலை அதிகரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் பொருளாதார நெருக்கடியால் தவிக்கும் ஆளும் தரப்புக்கு சுற்றுலாவிகள் ஊடான வருவாயிலும் மண்ணள்ளிப் போட்டிருக்கும் இந்தப் பன்னாட்டு நகர்வு மேலும் பின்னடைவை ஏற்படுத்தப்போகின்றது. கொரோனா பாதிப்புக்களுக்குப் பின்னர் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும்தான் இலங்கை சுற்றுலாவிகளால் பெருமளவு வருமானத்தைப் பார்க்கத் தொடங்கியிருந்தது. இப்போது அந்த வருமானத்தின் மீதும் விழுந்திருக்கும் அடி, ஆளும் தரப்பை இன்னும் நெருக்கடிக்குள் தள்ளும் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதே.

இலங்கையில் இடதுசாரிக் கொள்கையுடைய ஆளும் தரப்பு ஒன்று பதவியேற்றுள்ள நிலையில் நாடாளுமன்றத்திலும் அந்தத் தரப்பே அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவதைத் தடுக்கும் வகையிலான மேற்குலகின் அழுத்தமாகவும் இந்த நகர்வைப் பார்க்கும் வாய்ப்பிருக்கின்றது. தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்கு அதிகளவில் பொருளாதார நெருக்கடியைக் கொடுப்பதன் மூலம் அதனைத் தமது சார்புக்கு இழுப்பதும் சீனாவிடமிருந்து அந்நியப்படுத்துவதும் இதன் பின்னணியில் இணைந்திருக்கக்கூடிய நோக்கம் என்பதையும் மறுப்பதற்கில்லை.

இந்தப் புதிய நெருக்கடிக்குள் இருந்து தேசிய மக்கள் சக்தி வெளியே வருவது பெரும் சவால்தான்.

# வெளிவிவகார அமைச்சராகிறாரா சுமந்திரன்?

தெய்வீகன்



'நல்லாட்சி அரசுக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சமஷ்டி அடிப்படையிலான புதிய அரசமைப்பினை உருவாக்கும் பணிகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் –

'ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கும் –

தேசிய மக்கள் முன்னணி அரசு ஒப்புக்கொள்ளுமாயின் அவர்களுடைய அரசில் பங்கெடுப்பதற்குத் தமிழரசுக் கட்சி தயார் என்றும் சுமந்திரனுக்கு வெளிவிகார அமைச்சர் பதவி வழங்கப்படும் என்றும் நேற்றிரவு Truth with Chamuditha நிகழ்வில் கலந்துகொண்ட உதய கம்மன்பில MP தெரிவித்திருக்கிறார்.

அதாவது, 'தேசிய மக்கள் முன்னணி அரசானது சிறுபான்மை தமிழர்களுடன் டீல் போடப்பார்க்கிறது. நாட்டைப் பிரிப்பதற்கும், போர் வெற்றியைப் பலிகொடுக்கவும் திட்டமிடுகிறது' – என்பதுதான் கம்மன்பில அவிழ்த்திருக்கும் பிரச்சாரத்தின் உள்ளடக்கம்.

ஜாதிஹ ஹெல உறுமய என்ற படுமோசமான இனவாதக் கட்சியில் தனது அரசியலை ஆரம்பித்து, அதிலிருந்து விலகி மகிந்தவின் முகாமுக்குள் சென்ற உதய கம்மன்பில, பின்னர் அந்த அணி மீதான விமர்சனங்களை முன்வைக்கத் தொடங்கியவுடன், அங்கிருந்து நீக்கப்பட்டார். இன்று விமல் வீரவங்ஸ், வாசுதேவ நாணயக்கார போன்ற கடுஞ்சிங்கள தேசியக் கும்பலொன்றோடு ஐக்கியமாகியிருந்துகொண்டு, புதிய தேசிய மக்கள் முன்னணி அரசின் மீதான விமர்சனங்களை முன்வைத்துச் சுரண்டிக்கொண்டிருக்கிறார்.

நேற்றிரவு உதய கம்மன்பில வழங்கியுள்ள பேட்டியானது, அனுரவைச் சீண்டுவது மாத்திரமல்லாமல் அனுரவுக்கு எதிராக சிங்கள மக்களை உசுப்பேற்றுவது. பேட்டியில் தான் குறிப்பிட்ட விடயங்கள் பொய்யென்றால், அனுர அவற்றை பகிரங்கமாக மறுக்கலாம் என்றும் கம்மன்பில சவால் விடுத்துள்ளார்.

'வடக்கிலுள்ள தமிழ்க்கட்சியொன்று தமது அரசுக்கு ஆதரவு வழங்குவதாக உறுதியளித்துள்ளது'– என்று அண்மையில் அனுர குறிபிட்டதன் பின்னணியில், சுமந்திரனின் பெயரை உதய கம்மன்பில வெளியிட்டிருப்பதால், இது என்ன வகையான அரசியல் பேரம்? அவ்வாறு பேசப்பட்டிருந்தால் அதன் உள்ளடக்கம் என்ன? போன்றவற்றை சிங்கள மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டிய புள்ளியை நோக்கி அனுரவை இழுத்துவந்திருக்கிறார் உதய கம்மன்பில.

இந்த டீல் உண்மையா, உருட்டா என்பதெல்லாம் ஒருபக்கமிருக்கட்டும். இப்போது சுமந்திரனது பக்க நியாயப்பாடுகளுக்கு வருவோம்.

அமையப்போகும் தேசிய மக்கள் முன்னணி அரசாங்கத்துடன் தமிழர் தரப்பு இணைந்துகொள்வது சரியான முடிவா என்றால், தமிழ் மக்களது ஆதாரமான கோரிக்கைகளை, அனுர அரசு ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துமானால் – அதனுடன் கொள்கையளவில் இணைந்து செயற்படுவது இன்றைய அரசியல் சூழ்நிலையில் மதிநுட்பமானதும் தேவையானதும்கூட.



தமிழர் தரப்பு வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு தொடர்ந்து இறைஞ்சிக்கொண்டும் – அவர்களது நிகழ்ச்சி நிரல்களுக்காகக் காத்துக்கொண்டுமிருப்பதையும்விட, இன்றைய சூழலில் அரசுடன் அர்த்தபூர்வமான இணக்கப்பாட்டுக்குச் செல்வதும், பதிலாக, தமிழர்களது நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளச் செய்து – கையெழுத்துக்கள், வாக்குமூலங்கள் போன்ற புருடாக்களை விடுத்து – செயல்ரீதியாக உறதி செய்வதுகொள்வதற்குரிய தரப்பாக மாறுவதும் வரவேற்கப்படவேண்டியதே.

இதனை முன்னெடுப்பதற்கு சுமந்திரன் முற்றிலும் தகுதியான நபர் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இருக்கமுடியாது. கடந்த ஒரு தசாப்தகாலத்துக்கும் மேலாக, தமிழர் தரப்புக்கும் தென்னிலங்கைக்குமான பாலமாகச் செயற்படுகின்ற – நிதானமான – ஒரு தமிழ் அரசியல்வாதி சுமந்திரன் மட்டுமே. தமிழ் மக்களது தேசிய அடையாளத்தையும் போராட்ட நியாயத்தையும் தனது மாறாத கொள்கைகளாகக் கடைப்பிடிப்பவர். கூடவே, தமிழர் பிரதேசத்தின் பொருளாதார நலன்கள், இராஜதந்திர உறவுகள் என்று எதிர்காலத்தின் மீதான பார்வையோடு உறுதியாகப் பயணிப்பவர்.

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# வெளிவிவகார.....

4ம் பக்க தொடர்ச்சி...........

இலங்கை அரசியலையும் அரசமைப்பையும் விவரமாக விளங்கிக்கொண்டவர்களுக்குப் புரியும்.

இலங்கை அரசமைப்பும் நாடாளுமன்றமும் பெரும்பான்மையான ஒரு இனத்துக்குச் சார்பானது. சிறுபான்மையினரான தமிழர்களது அரசியல் பலம் அங்கு மிக மிகச் சிறியது. நாளை அனுர குமரா திஸநாயக்க, தமிழீழமே தருவதாக எழுதித் தந்தால்கூட, பத்து வருடங்களில் ஆட்சிபீடம் ஏறக்கூடிய அடுத்த அரசு, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அந்தத் தீர்வினை முறியடித்துவிட்டுப்போகலாம். அதனை ஜனநாயக மாற்றம் என்று நியாயப்படுத்தலாம். மாறி மாறி வரும் சிங்கள அரசுகள், கடந்த காலங்களில் ஒட்டியும் வெட்டியும் தமிழர்களது மிச்ச சொச்ச தீர்வு வரைவுகளில் செய்த அலப்பறைகள் இவைதான். தமிழர்களது தீர்வு மாத்திரமல்லாமல், பல்வேறு விசாரணைகளுக்கு அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள், அவசரக்குழுக்கள் போன்றவை ஒரு ஆட்சியில் கூடியதும் அடுத்த ஆட்சியில் கலைக்கப்பட்டதும், பல்வேறு குற்றவாளிகள் கைதானதும் - விடுதலையானதும் ஏன் நீதியரசரே நியமனமானதும் இறக்கிவிடப்பட்டதும்கூட இந்த வகை பல்டிகள்தான். ஆக, தமிழர்களது நீண்டகாலப் பிரச்சினைக்குரிய தீர்வு இனியும் இவ்வாறான குழுக்களின் குத்தாட்டத்திற்குள் அகப்படமுடியாது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களுக்கு பெற்றுக்கொள்ளவேண்டிய தீர்வு என்பது – விரும்பியோ விரும்பாமலோ – சிங்களத்தரப்போடு இணைந்து செயற்படுவதன் மூலம் பெற்றுக்கொண்டால் மாத்திரமே, அது நீடித்து நிலைக்கக்கூடியது. அது கடந்தகாலங்களில் எதிர்பார்த்தளவுகைகூடவில்லை. அதற்கு ராஜபக்ஷக்களும் அவர்களது 'உடன்பிறவா சகோதரரான' ரணிலும் ஆற்றிய பங்களிப்புக்களை இங்கு பட்டியலிடத்தேவையில்லை. கூடவே, சம்மந்தரை எதிர்க்கட்சித்தலைவராக்கியும் ஒன்றுமே நடைபெறவில்லை என்றெல்லாம் சகட்டுமேனிக்குக் கூறிவிடமுடியாது. ஏனெனில், ஆட்சியிலிருந்த சிங்கள அரசினால் சிங்கள மக்களுக்கே ஒன்றும் நடக்கவில்லை.

ஆனால் -

'இதெல்லாம் கதைக்கு ஆகாது. சிங்களத்துக்கு நாங்கள் பணியமாட்டோம். அவர்களது சிங்கிள் டீக்குக்கூட குனிய மாட்டோம்' என்று வீரம் செறிந்த மறவர்கள் யாராவது மடி கொதித்தால், அவர்கள் மீண்டும் ஆயுதமேந்திப் போராடலாம். அவர்களின் பின்னால் மக்கள் அணிவகுக்கலாம். அவர்களின் பாதையில் - இலங்கை அரசமைப்புக்கு வெளியே - யாருக்கும் கட்டுப்படாத - அரிய தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

© https://web.facebook.com/theivigan.panchalingam






### என்னை நாடாளுமன்றுக்கு அனுப்பினால்

# கண்டியில் நிலைபேண்தகு அபிவிருத்திக்கு முயல்வேன்

### பாரத் அருள்சாமி தெரிவிப்பு

என்னை கண்டி மாவட்டத்தின் தமிழ் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கும் பட்சத்தில், நாடாளுமன்றத்தில் உங்களுடைய பிரதிநிதியாக கண்டி மாவட்டத்திற்கு ஒரு நிலைபேண்தகு அபிவிருத்தியை உருவாக்குவதற்கு முன்னின்று செயல்படுவேன் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் கண்டி மாவட்ட வேட்பாளர் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எங்களை பொறுத்தவரை ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை நாடாளுமன்றத்திற்கு அனுப்புவது எங்களுக்கு தேவையான சட்டங்கள் உருவாக்குவதற்காகும்.

அபிவிருத்தி என்பதையும் தாண்டி எங்களுக்கான நாடாளுமன்றத்தில் எங்களுடைய உறுப்பினர் ஒருவர் இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த உறுப்புரிமை நாங்கள் பெற்றுக்கொள்கின்றோம்.

கடந்த காலங்களில் பலர் ஆளும் கட்சிகளிலும், எதிர்க்கட்சிகளிலும் 10 வருடமாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தும் எங்களுடைய கண்டி வாழ் தமிழ் மக்களுக்கு எதேனும் நன்மை கிடைத்ததா என்று கேட்டால் அது இன்னும் ஒரு கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

இன்று ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரிக்கு எத்தனையோ மாணவர்கள் கண்டி மாவட்டத்திலிருந்து வருகை தர முடியாதுள்ளனர். ஆகவே, அதில் சட்டமாற்றங்கள் கொண்டுவரப்பட்டதா என்பது இன்றைக்கும் ஒரு கேள்விக்குறியாகவேதான் இருக்கின்றது.

இன்று அரசமைப்பை மாற்றியமைக்க போவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கக் கூறியுள்ளார். இந்த நேரத்தில் அங்கு கட்டாயம் தமிழ் பிரதிநிதித்துவம் ஒன்று இருந்தாகவேண்டும்.

கண்டி மாவட்டத்தில் இன்றைக்கு பல பிரதேச செயலகங்கள் இருந்தாலும் கூட கிராம சேவகர்கள் பிரிவுகள் இன்னும் பிரிக்கப்படாமல் இருக்குகின்றன.

தமிழ் மக்கள் செறிந்து வாழ்கிற பகுதிகளில் ஒரே கிராம சேவகர் பிரிவில் கிட்டத்தட்ட 4,000 மக்கள் வாழ வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கு இன்னும் தீர்வுகள் வழங்கப்படவில்லை.

ஆகவே, என்னை உங்களுடைய பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கும் பட்சத்தில் இந்த நாடாளுமன்றத்தில் உங்களுடைய பிரநிதியாக இந்த கண்டி மாவட்டத்திற்கு ஒரு நிலைபேண்தகு அபிவிருத்தியை உருவாக்குவதற்கு முன்னின்று செயல்படுவேன். – என்றார்.(05)




# கடவுச்சீட்டு தட்டுப்பாடு இனிமேல் ஏற்படாதாம்

### ஆளும்தரப்பு அறிவிப்பு

கடவுச்சீட்டு பிரச்சினைக்கு படிப்படியாக தீர்வு வழங்கப்படவுள்ளது. செவ்வாய்க்கிழமை 42,000 கடவுச்சீட்டுக்கள் கிடைக்கப்பெறவுள்ளதோடு, நவம்பரில் மேலும் ஒரு லட்சம் கடவுச்சீட்டுக்கள் கிடைக்கப்பெறவுள்ளன என அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு செவ்வாய்கிழமை இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கடவுச்சீட்டு பிரச்சினை கடந்த அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டதாகும். அந்த அரசாங்கத்தால் விலைமனு வழங்கப்பட்ட நிறுவனம் உரிய நேரத்தில் கடவுச்சீட்டுக்களை விநியோகிக்கவில்லை. எவ்வாறிருப்பினும் நாம் அந்த பிரச்சினைக்கு தீர்வை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கடந்த அரசாங்கத்தால் இழைக்கப்பட்ட தவறை சரி செய்வதற்காக நாம் தற்போது பாடுபட்டு வருகின்றோம். கடந்த சனிக்கிழமை 7,500 கடவுச்சீட்டுக்கள் கிடைக்கப்பெற்றன. புதன்கிழமை 42,000 கடவுசீட்டுக்கள் கிடைக்கப்பெறவுள்ளன. எனவே மக்கள் கலவரமடையத் தேவையில்லை. தற்போது கடவச்சீட்டுக்கு தட்டுப்பாடு இல்லை.

இவ்வாரத்துக்குள் 50,000 கடவுச்சீட்டுக்கள் கிடைக்கப்பெறும். நவம்பரில் மேலும் ஒரு லட்சம் கடவுச்சீட்டுக்கள் கொண்டுவரப்படவுள்ளன. எனவே மக்கள் அவசரப்பட்டு கொழும்புக்கு வர வேண்டிய தேவை இல்லை. மீண்டும் கடவுச்சீட்டு தட்டுப்பாடு ஏற்படாமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளும். – என்றார்.(05)

# சுவிஸ் தூதரக முதல் செயலாளர் சிவில் அமைப்பினருடன் சந்திப்பு




சுவிஸ் தூதரக அரசியல் விவகாரங்களுக்கான முதல் செயலாளர் ஜஸ்டின் கொய்லட் தலைமையிலான குழுவினர் செவ்வாய்க்கிழமை மன்னாரிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட நிலையில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

இதன் போது குறித்த குழுவினர் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதன் போது மன்னார் மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள்,பொருளாதாரம், தொடர்பாகவும், கேட்டறிந்து கொண்டதாக சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தெரிவித்தார்.

இதன் போது தற்போதைய ஜனாதிபதியின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய பொறுப்பு கூறல்கள் குறித்தும் வலியுறுத்தப்பட்டது.

மேலும் சிவில் சமூக அமைப்புகளின் செயற்பாடுகள் மற்றும் அவர்களின் நிலைப்பாடுகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.(05)

# அநுரகுமார மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் தோற்றுவிட்டன

## ராஜித்த சேனாரத்ன சாடல்



மக்களின் வாழ்வாதார செலவை குறைத்து நிவாரணம் வழங்குவதாகவும் வட் வரியை குறைப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமாரதிஸாநாயக்கமக்களுக்குவழங்கியவாக்குறுதியை நிறைவேற்றமுடியாமல்போயுள்ளது. அரசவருமானத்துக்கான வழிவகைகள் இல்லாமையே இதற்கு காரணமாகும் என புதிய ஜனநாயக முன்னணியின் களுத்துறை மாவட்ட வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித்த சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் உத்தியோகபூர்வ காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

சர்வதேசநாணய நிதியத்தின் வரி அழுத்தங்களில் இருந்து மக்களுக்கு நிவாரணம் வழங்குவதாகவும் வருமான வரி எல்லையை அதிகரிப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின்போது வாக்குறுதி வழங்கி இருந்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் திருத்தம் மேற்கொள்வதாக இருந்தால், எமக்கு கடன் வழங்கிய 18 நிறுவனங்கள் மற்றும் 3 நாடுகளுடன் கலந்துரையாடி இணக்கப்பாடு எட்டப்பட்டாலே சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் திருத்தம் மேற்கொள்ள முடியும்.

ஒரு இலட்சம் வருமானம் பெறுபவர்களிடம் வருமானவரி அறவிடும் எல்லையை இரண்டு இலட்சமாக மாற்றுவதாக இவர்கள் மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார்கள். சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் கடந்த மாதம் இலங்கைக்கு வந்திருந்தபோது, இது தொடர்பில் கலந்துரையாட அரசாங்கம் சார்ப்பாக சிலர் சென்றார்கள்.

அதில் நிதி அமைச்சின் அதிகாரிகளோ மத்திய வங்கி அதிகாரிகளோ கலந்துகொண்டிருக்கவில்லை. இவர்களின் இந்த கோரிக்கைக்கு நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்தார்கள். ஆனால் இதனால் இழக்கப்படும் வருமானத்தை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்ற கேள்விக்கு இவர்களிடம் பதில் இருக்கவில்லை.

அதேபோன்று வட்வரியை குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் இவர்கள் நாணய நிதியத்துடன் கலந்துரையாடினார்கள். அதற்கும் நாணய நிதிய பிரதிநிதிகள் இணக்கம்தெரிவித்துள்ளனர். ஆனால்வட்வரியைகுறைப்பதால் அரசாங்கத்துக்கு இல்லாமல்போகும் வருமானத்தை எந்த வழியில் பெற்றுக்கொள்வது என்ற கேள்விக்கு இவர்களிடம் பதில் இருக்கவில்லை.

நாணய நிதியத்துடன் கலந்துரையாடலுக்கு சென்றவர்கள் எந்த தயார் படுத்தலும் இல்லாமலே சென்றிருந்தார்கள். அநுரகுமாரவின் கட்சியில் இருக்கும் புத்திஜீவிகள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் இதனை வெற்றிகரமாக பேசி முடிப்பார்கள் என்றே நினைத்தார்கள்.

இறுதியில் நாணய நிதியத்துடன் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் எட்டிய இணக்கப்பாட்டை அவ்வாறே முன்னெடுத்துச் செல்வதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் அநுரகுமார திஸாநாயக்க மக்களுக்கு வழங்கிய முதலாவது வாக்குறுதி தோல்வியடைந்துள்ளது.

அதேபோன்று அரச ஊழியர்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 55ஆயிரம் ரூபா வரை அடிப்படை சம்பளத்தை அதிகரிப்பதாக ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்தார். அதனை வெறும் வாக்குறுதியாக தெரிவிக்கவில்லை. அரச வருமானம் ஏனைய செலவுகளை திட்டமிட்டே தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் அரச ஊழியர்களின் சம்பளத்தை 6 மாதங்களுக்கு ஒரு முறை அதிகரிப்பதாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்திருந்தார். ஆனால் அடுத்த வருடம் வரவு செலவு திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பள உயர்வு தொடர்பில் கவனம் செலுத்துவதாகவே தற்போது ஜனாதிபதி தெரிவிக்கிறார். இந்நிலையில், எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் அரச ஊழியர்கள் தங்களுக்கு கிடைக்க இருந்த சம்பள அதிகரிப்பை இழந்த நிலையிலேயே வாக்களிக்கப்போகிறார்கள்.

எனவே நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப ரணில் விக்ரமசிங்க முறையான வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் சென்றார். அந்த வேலைத்திட்டத்தை மாற்றியமைத்தால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என்று நாங்கள் ஆரம்பத்தில் இருந்து தெரிவித்து வருகிறோம்.

அது தற்போது உண்மையாகியுள்ளது. அதனால்தான் அநுரகுமார திஸாநாயக்க, பொருளாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மாற்றியமைப்பதாக தெரிவித்தபோதும் இதுவரை ரணில் விக்ரமசிங்க முன்னெடுத்த வழியிலேயே செல்கிறார்.

விவசாயிகளுக்கான உர நிவாரண தொகை மற்றும் மீனவர்களுக்கான நிவாரணம் ரணில் விக்ரமசிங்க வழங்குவதாக தெரிவித்த விடயமாகும். அதுவும் விவசாயிகளுக்கு நிவாரண அடிப்படையில் உரம் வழங்குவதாகவே ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். தற்போதைய அரசாங்கம் பணமாக வழங்கி இருக்கிறது. இதன் பெறுபேற்றை எதிர்வரும் 4 மாதங்களுக்கு பின்னரே பார்த்துக்கொள்ள முடியுமாகும். - என்றார்.(05)

# சுற்றுலாத் தளம் மீது தாக்குதல் நடக்கலாம் அமெ. தூதரகம் பயண எச்சரிக்கை விடுப்பு

அறுகம்குடா பகுதியில் சுற்றுலாத் தலங்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படலாம் என தகவல் கிடைத்துள்ளதாக இலங்கையில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், குறித்த பகுதிக்கு மறு அறிவித்தல் விடுக்கப்படும்வரை சுற்றுலா செல்வதை தவிர்க்குமாறு தமது நாட்டுப் பிரஜைகளுக்கு அமெரிக்கத் தூதரகம் அறிவுறுத்தல் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சந்தேகத்திற்கு இடமான முறையில் சம்பவங்கள் இடம்பெற்றால் 119 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குஅறிவிக்குமாறுதனதுநாட்டுப்பிரஜைகளுக்கு அமெரிக்கத்தூதரகம் தெளிவுபடுத்தியுள்ளது.

தொலைபேசி போன்ற தொடர்பு சாதனங்களை வைத்திருக்குமாறும் இலங்கையின் உள்ளூர் ஊடகங்களை பார்வையிடுமாறும் தனது நாட்டுப் பிரஜைகளிடம் அமெரிக்கத் தூதரகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# களனிப் பல்கலைக்கழக மாணவன் உயிரிழப்பு

களனி பல்கலைக்கழக மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

களனிப் பல்கலைக்கழகத்தின் கன்னங்கர விடுதியின் மேல்தளத்தில் இருந்து விழுந்து குறித்த மாணவன் உயிரிழந்துள்ளார்; எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவன், கொலைசெய்யப்பட்டாரா அல்லது தற்கொலை செய்துகொண்டாரான என்பது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புத்தளம் மார்க்கத்தில் ரயில் சேவை தாமதம்

புத்தளம் மார்க்கத்தில் ரயில் சேவை தாமதமடைந்துள்ளது.

ஜா-எல ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள சமிக்ஞையில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறால் சேவை தாமதமடைந்துள்ளதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாணவர் தூதுவர் மாநாடு காரைதீவில்



(நூருல் ஹுதா உமர்)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் வேலைத்திட்ட மாணவர் தூதுவர் மாநாடு காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணன் தலைமையில் காரைதீவு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.







மாவட்ட உள சமூக உத்தியோகத்தர் யூ.எல். அசாருதீன் மற்றும் காரைதீவு பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஜீ.ரேவதி ஆகியோரின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவஞானம் ஜெகராஜன் கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 4 கல்வி வலயங்களை சேர்ந்த மாணவதூதுவர்கள் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களும் அவர்களது ஆசிரியர்களும் என 100 பேர்கள் கலந்து கொண்டனர் அத்தோடு இந்நிகழ்விற்கு பொலிஸ் நிலைய அதிகாரிகள் வலயக் கல்வி, முறைசாரா கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித்து தங்களது கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் வளவாளர்களாகவும், ஒருங்கிணைப் பாளர்களாகவும் அம்பாறை மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் அம்பாறை, சம்மாந்துறை, நிந்தவூர் செயலக பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# 1997 இலக்கம் அறிமுகம்

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்கான அடிப்படை நடவடிக்கையாக 1997 என்ற விசேட குறுகிய தொலைபேசி இலக்கம் நேற்று முதல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எந்தவொரு சுற்றுலாவியும் தமது பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைக்கு இந்த இலக்கத்தின் ஊடாக அணுக முடியும் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் உள்ள இராணுவத் நிலைமையை கருத்தில் கொண்டு, வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பிற்காக விசேட பாதுகாப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்த அனைத்து பாதுகாப்பு படையினரின் ஒத்துழைப்புடன் விசேட வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இந்தத் தொலைபேசி எண்ணும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## பலஸ்தீனம்....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றிக்கொண்டுள்ளது. இது அதன் இரட்டை வேடத்தையே எடுத்துக்காட்டுகிறது.

மக்கள் விடுதலை முன்னணிக்கு நிலையான கொள்கை ஒன்று இல்லை என்பதை நாங்கள் தொடர்ந்து தெரிவித்து வந்திருக்கிறோம். பலஸ்தீன் தொடர்பில் தற்போது அது உறுதியாகி இருக்கிறது. எனவே ஆளும்தரப்பைக் கொண்டுசெல்லும் இவர்களுக்கு உறுதியான கொள்கையும் இல்லை. வேலைத்திட்டமும் இல்லை என்றார்

## ஜோன்டனுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதிவு செய்யப்படாத சொகுசு கார் ஒனன்று மீட்கப்பட்டமை தொடர்பில் வாக்கு மூலம் அளிப்பதற்காக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நேற்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையானார். அங்கு அவர் கைது செய்யப்பட்டார். பின்னர் ஜோன்ஸ்டன் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படட்டார்.

## இஸ்ரேலியர்களைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுக்கொண்டுள்ளது.

இலங்கையின் தலைநகரில் பாதுகாப்பு படையினரின் பிரசன்னம் அதிகளவு காணப்படுவதாக இஸ்ரேலின் தேசிய பாதுகாப்பு பேரவை தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையின் ஏனைய பகுதிகளிற்கு செல்வதை இஸ்ரேலியர்கள் பிற்போடவேண்டும், எனஅந்தநாட்டின்தேசிய பாதுகாப்புபேரவை கேட்டுக்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள 'இஸ்ரேல் டைம்ஸ்' பத்திரிகை, நீங்கள் இஸ்ரேலியர்கள் என்பதை வெளிப்படுத்துவதைதவிர்த்துக்கொள்ளுங்கள் என்றும் கேட்கப்பட்டுள்ளதாகச் செய்தி வெளியிட்டுள்ளது.

## வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் சம்பந்தமாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

அமெரிக்க தூதுவர், காணி விடுவிப்பு தொடர்பான விவரங்களை ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார். தற்போது ஜனாதிபதியின் வழிகாட்டுதல்களுக்கு அமைய காணி விடுவிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட உள்ளன என ஆளுநர் தெரிவித்தார்.

ஆளுநர் வடக்கு மாகாணத்தில் காணி சம்பந்தப்பட்ட பிணக்குகளில் சட்டவிரோத காணி ஆக்கிரமிப்புகள் பெருமளவில் காணப்படுகின்றன எனவும் அவற்றை தீர்ப்பதற்கு தற்போது உள்ள ஆளும்தரப்புடன் கலந்தாலோசித்து சாதகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

வடக்கில் காணப்படும் உற்பத்திகளுக்கான சந்தைவாய்ப்புகளைப்பெற்றுக்கொள்வதற்கான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கைக்கான அமெரிக்க தூதுவரிடம் அவர் கேட்டுக்கொண்டார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் வடக்குமாகாண அபிவிருத்திக்கு தேவையான ஒத்துழைப்புகளைவழங்கதயாராக உள்ளதாக தெரிவித்ததுடன் ஆளுநரிடமிருந்தும் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

## ஐ.நா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசினார்.

இச்சந்திப்பில், பிரதமருக்கு வாழ்த்து தெரிவித்த ஐநா பிரதிநிதி, இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்கெனவழங்கப்படும் ஐக்கிய நாடுகளின் ஒத்துழைப்புக்களையும் உறுதிப்படுத்தினார்.

இலங்கையின் வறுமை ஒழிப்பு வேலைத் திட்டங்கள் மற்றும் டிஜிட்டல் மயப்படுத்தலுக்கான திட்டங்களுக்கு ஐக்கிய நாடுகள் சபை ஒத்துழைப்புகளை வழங்கியுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது மகளிருக்கான ஊக்குவிப்புசெயற்பாடுகள்தொடர்பிலும்விசேட கவனம் செலுத்தப்பட்டது. இலங்கையில் முன்னெடுக்கப்படும்மகளிருக்கானஊக்குவிப்பு வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்புகளை வழங்க ஆர்வமுடன் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

பிரதமரின் செயலாளர் பிரதீப் சப்புதந்த்ரி, பிரதமரின் மேலதிக செயலாளர் மஹிந்த குணரத்ன, வெளிவிவகார அமைச்சின் ஐக்கிய நாடுகள் மற்றும் மனித உரிமைகள் பிரிவுக்கான பணிப்பாளர் நாயகம் தயானி மெண்டிஸ் உட்பட ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் அலுவலகத்தை சேர்ந்த பெட்ரிக் மெக் கர்த்தி மற்றும் நெத்மினி மெதவல ஆகியோரும் இந்த சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

## அநுரகுமார ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கைகளை வெளியிடுவார் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியானதன் பின்னர் மக்களுக்குவழங்கியவாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற அறிக்கைகளை பகிரங்கப்படுத்துமாறு உதய கம்மன்பில ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார்.

குண்டுத் தாக்குதல்கள் தொடர்பான இரண்டு அறிக்கைகளை ஜனாதிபதி வெளியிடாத காரணத்தால் உதய கம்மன்பில அவற்றில் ஒன்றை வெளியிட்டார். இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து ஆராய்வதை விடுத்து விடயங்களை பகிரங்கப்படுத்தியநபருக்குஎதிராகசெயற்படுவது முறையற்றது.

பாரம்பரியமான அரசியல்வாதிகளை போன்றே ஜனாதிபதி செயற்படுகிறார். தேர்தல் பரப்புரை மேடைகளில் மக்களுக்கு குறிப்பிட்ட விடயத்தைதற்போதுமறந்துவிட்டார். மக்களை ஏமாற்றியுள்ளார். ஜனாதிபதியின் முறையற்ற செயற்பாடுகளை எதிர்க்கும் பலமான எதிர்க்கட்சித் தோற்றம் பெறவேண்டும்.

இடம்பெறவுள்ள பொதுத்தேர்தல் தீர்மானமிக்கது. பலமான எதிர்க்கட்சியாக செயற்படும் தகைமை எமது அணிக்கே உண்டு. ஆகவே எதிர்க்கட்சி பதவியை மக்கள் எமக்கு வழங்க வேண்டும் என்பதையே வலியுறுத்துகிறோம் என்றார்.

## அறுகம்பை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமாகும்.

தேர்தல் காலத்தில் மற்றும் குறிப்பிடத்தக்கதளவில் சுற்றுலா பயணிகள் வருகை தரும் சந்தர்ப்பத்தில் எமது மக்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் என இரு தரப்பினரையும் பாதுகாப்பதற்கு அனைத்து முன்கூட்டிய பாதுகாப்புநடவடிக்கைகளையும் மேற்கொள்வது கட்டாயமாகும். எனவே இதுதொடர்பில் விரைவாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் முழுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் சம்பந்தப்பட்ட அனைத்துநிறுவனங்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அவ்வாறு செய்வதன் மூலம் தேர்தல் செயற்பாட்டின் நேர்மையை பாதுகாக்கவும் தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லவும் முடியும்.

அவதானமாக இருக்குமாறும் ஏதாவது சந்தேகத்துக்குரிய செயற்பாட்டை அறிந்தவுடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு அறிவிக்குமாறும் பொது மக்களையும் கேட்டுக்கொள்கிறேன். அதேநேரம் குறித்த நிறுவனத்தினால் விடுக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புஆலாசேனைகளைபின்பற்றுமாறும் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

## பொதுத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு பிரதான நீதிவான் திலின கமகே நேற்று மறுப்பு தெரிவித்தார்.

கொழும்பு குற்றப்பிரிவு சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி ஜாகொட ஆராச்சி முன்வைத்த காரணங்களை பரிசீலித்த பின்னரே சிறீரங்காவின் முன்பிணை மனு நிராகரிக்கப்பட்டது.

பொலிஸார் தன்னைக் கைது செய்வதற்கானநடவடிக்கைகளைமுன்னெடுத்துள்ளதால், முன்பிணை கோரி ஸ்ரீ ரங்கா தரப்பில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## தடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*35, 25 வயதுடையவர்கள் என்று மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.*

*குருணாகலைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவருக்கு கண்ணில் ஏற்பட்டுள்ள வெண்படல நோயைக் குணப்படுத்துவதற்காக மட்டக்களப்பு மென்ராசா வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சீயோன் தேவாலயத்தின்போதகருடன்தொடர்பு கொண்ட பின்னர் இவர்கள் இருவரும் மட்டக்களப்புக்கு வந்துள்ளனர்.*

*நோய்க்குள்ளானவரும் அவருக்கு உதவியாகஇருவரும்குருணாலிலிருந்து நேற்றுக் காலையே மட்டக்களப்பை வந்தடைந்தனர்.*

*இந்நிலையில், இவர்கள் நடமாட்டத்தில் சந்தேகமடைந்த பொதுமக்கள் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு தெரிவித்ததையடுத்துபொலிஸார் அந்த இடத்துக்குச் சென்று இருவரையும் கைது செய்தனர்.*

*சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட இருவரதும் கைவிரல் அடையாளங்களைப் பெற்று விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.*




# புனித பூமி என்ற போர்வையில் பிக்கு விவசாயக் காணிகளுக்குள் அடாவடி



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டம் , குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட திரியாய் பகுதியில் உள்ள வயல் தனியார் விவசாய காணிக்குள் பிக்குவால் அடாவடித்தனம் தொடர்ந்து வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தங்களுக்கு சொந்தமான காணிக்குள் விவசாய பெரும்போக நெற் செய்கைக்கான இயந்திரம் மூலமான உழுதுதல் நடவடிக்கையின் போது காணிக்குள் புகுந்த பௌத்த பிக்கு அட்டகாசம் ஏற்படுத்தியதாக புல்மோட்டையை சேர்ந்த ஜெ.புஹாரி தெரிவிக்கிறார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிப்பதாவது -

வளத்ணாமலை பகுதியில் காலம் காலமாக எங்கள் விவசாய காணியில் விவசாயம் செய்து வந்தோம் தற்போது பௌத்த பிக்குவால் பெரும்போகச் செய்கைக்காக உழுதுதலை மேற்கொள்ளும் போது தடுத்து நிறுத்தினார்.

இம் முறை குத்தகைக்கு எனது சிறிய தந்தைக்கு காணியை வழங்கியிருந்தேன் இருந்த போதிலும் பௌத்த பிக்குவின் அட்டகாசம் காரணமாக 119 பொலிஸ் தொலைபேசி இலக்கத்துக்கு முறைப்பாடு செய்த போது அதனை மீறியும் தடையை ஏற்படுத்தி வருகிறார். இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. - என்றார்.

புனித பூமி என்ற போர்வையில் விவசாய காணிகளை தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தம் என பல ஏக்கர்களை அடாத்தாக அபகரிப்புச் செய்யும் அரிசி மலை திரியாய் குறித்த பௌத்த பிக்குவான பாணமுறே திலகவன்ச தேரர், கடந்த கோட்டாபயவின் ஆட்சி காலத்தில் ஜனாதிபதியின் கிழக்கு மாகாண தொல்பொருள் செயலணியின் உறுப்பினராக செயற்பட்டு வந்தவர் மட்டுமல்லாது வடக்;கு கிழக்கு பௌத்த சங்கத்தின் தலைவர் எனவும் தெரிய வருகிறது அரசாங்கத்தால் இவருக்கு மெய்ப்பாதுகாவலரும் வழங்கப்பட்டுள்ளது . ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க ஆட்சியின் பின் அதிரடியாக முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு நீக்கப்பட்ட போதும் இவ்வாறு பௌத்த பிக்குவுக்கு மாத்திரம் ஏன் பாதுகாப்பு வழங்கப்படுகிறது என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

திரியாய்க் கிராமத்தின் பூர்விக வயல் நிலங்களில் முக்கிய வயல் வெளிகளான வளத்தாமரை ,ஆதிக்காடு, ஒட்டுப்புல்மோட்டை ,நீராவிக்கண்டல் ,வேடன்குளம் என உள்ளடக்கியவயல்வெளிகளில் மக்கள் பரம்பரை பரம்பரையாக வயற்செய்கை மேற்கொண்டு வரும் நிலையில் புல்மோட்டை அரிசிமலைப் பிக்குவால் அடாவடியாக கையகப்படுத்தப்பட்ட 88 ஏக்கர் பொதுமக்களின் உறுதிக் காணியில் விவசாயம் மேற்கொள்ள பாரிய சிரமத்தை மக்கள் எதிர்கொள்கின்றனர். இக்காணிகள் அனைத்துமே உறுதிக்காணிகள் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

வருடா வருடம் பெரும் போக வயற்செய்கையின் போதும் இவ்விதமான நெருக்கடிகளை மக்கள் எதிர்கொள்வதும் பின் பிக்குவின் அடாவடியால் பயந்து இருப்பதுமான அவல நிலையில் மக்கள் இருக்கின்றனர்.

நீதிமன்றால் மக்களிடம் காணிகளை கையகப்படுத்தக் கோரியும் பிக்கு அடாவடியான முறையில் இச் செய்யற்பாட்டை முன் எடுப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பூர்விக வயல் நிலங்களில் ஒன்றான வளத்தாமலையடி, ஆதிக்காடு, வேடன் குளம், போன்ற 880 ஏக்கர்

விஸ்தீரனமுடைய 125 வருடப் பழைமை வாய்ந்த ஆங்கிலேயர் காலத்து உறுதி உடைய காணிகள் ஆகும்.

1985 ஆம் ஆண்டு வரை அந்நிலங்களில் வயற்செய்கை மேற்கொண்டு வந்த நிலையில் 1985 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது மக்கள் பல்வேறு மாவட்டங்களிற்கு இடம்பெயர்ந்தனர்.

தொடர்ந்து 1990 ஆம் ஆண்டு மீண்டும் மக்கள் வந்து இக்காணிகளில் மானாவாரி நெற் செய்கையை செய்தனர்.

தொடர்ந்தும் ஏற்பட்ட இனக்கலவரத்தினைத் தொடர்ந்து 2002ம் ஆண்டு மீண்டும் தமது சொந்த நிலங்களுக்கு மீளக்குடியமர்த்தப்பட்டனர். இருந்த போதும் போரினால் வாழ்வாதாரங்களை இழந்த விவசாயிகள் 2020 ஆம் ஆண்டு மீண்டும் தமது வயல் நிலங்களில் வயற்செய்கை மேற்கொள்ளச் சென்ற

வேளை புல்மோட்டை அரிசி மலைப் பிக்குவினால் மக்களின் அனைத்துக்காணிக்காணிகளும் அடாவடியான முறையில் காணிகள் கையகப்படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு கடுமையான அச்சுறுத்தல்களையும் மேற்கொண்டு வந்தார்.

2022ம் ஆண்டு தொடரப்பட்ட வழக்கில் மக்களின் காணிகளை மக்களிடம் கையகப்படுத்த உத்தரவு பிறபித்த போதும் தொடர்ந்தும் அடாவடியான முறையில் பிக்கு செயற்பட்டு வந்த நிலையில் கடந்த 05.09.2024 ஆம் ஆண்டு விவசாய நடவக்கையில் ஏற்பட்ட விவசாயிகளை தடுத்து நிறுத்தி மீண்டும் பிக்கு தனது அடாவடியை தொடர்ந்தார்.

உடனடியாக இப்பிணக்கு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரிடம் தெரியப்படுத்தப்பட்டு கடந்த 07.09.2024 ஆம் திகதி மாலை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பிக்கு உற்பட காணி உரிமையாளர்கள் அனைவரையும் அழைத்து முழுமையான விசாரணைக்குப் பிறகு உரிய ஆவணங்கள் உள்ள விவசாயிகள் உடனடியாக வயற்செய்கையில் ஈடுபடுமாறு அனுமதி வழங்கினார்.

இதைத் தொடர்ந்து 2024.09.10 ஆந் திகதி குச்சவெளி கமநல சேவைத் திணைக்கள அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் 2024 ஆம் ஆண்டுக்கான பெரும்போக வயற் செய்கைக்காக மக்கள் தங்கள் காணிகள் அளவீடு செய்யச் சென்ற வேளை குறித்த காணிகளில் அளவீடு செய்ய விடாது தடுத்த நிலையில் புல்மோட்டை பொலிஸ் உயர் அதிகாரி சம்பவ இடத்துக்கு வருகை தந்து மீண்டும் எதிர்வரும் திங்கட்கிழமை குச்சவெளி பிரதேச செயலகத்துக்கு அனைத்து விவசாயிகளையும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு பணித்தனர். இந்நிலையில் காணி அளவீடு தடுத்து நிறுத்தப்பட்டது.

இவ்வாறாக கடந்த தினத்தில் புல்மோட்டையினைச் சேர்ந்த ஜெயினுலாப்தீன் புகாரி என்பவரின் உறுதிக் காணிக்குள் அடாவடியாக வயற் செய்கை மேற்கொள்ள முயன்ற குறித்த பிக்குவின் செற்பாட்டால் மேற்கொள்ளப்பட்ட அவசர நடவடிக்கைகளால் 2024.09.07 அனைத்தும் விவசாயிகளும் திருகோணமலை மாவட்டச் செயலகத்துக்கு அழைக்கப்பட்டு விவசாயிகளினால் தகுந்த ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் உடனடியாக விவசாயிகளின் காணிகளை மீண்டும் விவசாயிகளிடம் ஒப்படைக்குமாறு மாவட்டச் செயலாளர் உத்தரவு பிறப்பித்தார்.

இவ்வாறாக புனித பூமி என அடையாளப்படுத்தி அரச பாதுகாப்பு வழங்கப்பட்ட மெய்ப்பாதுகாவலர்களுடன் அத்துமீறி அப்பாவி மக்களை அச்சுறுத்தி நெற் செய்கை காணிகளை விவசாயம் செய்யவிடாது அடாத்தாக தடுத்து நிறுத்துகின்றனர். கடந்த நல்;லாட்சி அரசாங்கம் தொடக்கம் அதிகளவான காணி அபகரிப்பு இடம் பெற்ற மாவட்டமாக திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு காணப்பகுவதாகவும் இப் பகுதியில் 3887 ஏக்கர் தனியார் நிலங்கள் அபகரிக்கப்பட்டு 26 விகாரைகள் கட்டுமாணப்பணிக்காக ஒதுக்கப்பட்டதாகவும் அமெரிக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் காணி ஆராய்ச்சியில் ஈடுபடும் ஒக்லேன்ட் நிறுவனத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

குறித்த அரிசிமலை திரியாய் பகுதிக்கு 2010ஆம் ஆண்டு ஹம்பாந்தோட்டையில் இருந்து வருகை தந்த பிக்குவினால் புனித பூமி என கூறி பல நில அபகரிப்புக்கள் இடம் பெற்றுள்ளதுடன் பெரும்பான்மை இன குடியேற்றத் திட்டத்தையும் மேற்கொண்டுள்ளார்.

மக்கள் விவசாய காணிக்குள் நெற் செய்கை செய்ய விடாது



தடுத்து நிறுத்திய சப்தநாக விகாரையின் விகாராதிபதி அத்து மீறி மீண்டும் அவர் உழுதுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதால் அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. இது தொடர்பில் குச்சவெளி பொலிஸில் முறைப்பாடளித்த ஜெ.புஹாரி தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

சட்ட ரீதியான ஆவணங்கள் இருந்த போதும் தங்களது காணிகளில் விவசாய செய்கையில் ஈடுபடாது வாழ்வாதாரத்தை நாசப்படுத்தும் பௌத்த பிக்குகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்காமை குறித்து தாங்கள் கவலையடைவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். சிறுபான்மை மக்களின் காணிகள் இவ்வாறே வடக்கு கிழக்கில் அபகரிக்கப்பட்டு கொண்டிருக்கின்றது .

தற்போதைய அரசாங்கம் பல அதிரடியான நல்ல பல விடயங்களை நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் செய்வதாக கூறுகின்ற போதிலும் இப்படியான அப்பாவி மக்களின் உரிமைகள் விடயத்தில் அதிக அக்கறை கொண்டு உரியவர்களின் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு விவசாய செய்கையில் ஈடுபட ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பௌத்த துறவிகளுக்கு ஒரு சட்டம் சாதாரண பொது மகனுக்கு ஒரு சட்டமா எனவும் குறித்த விவசாயிகள் அங்கலாய்க்கின்றனர்.

விவசாயத்தை நம்பி வாழும் இம் மக்களின் வாழ்வாதாரமே நெற் செய்கையாகும் .

இருந்த போதிலும் நில அபகரிப்புக்களை மேற்கொள்வதால் ஜீவனோபாயம் பாதிக்கப்படுகிறது .

எனவே தான் தற்போதைய அரசாங்கம் இம் மக்களுக்கு சரியான நிரந்தர தீர்வை வழங்க முன்வரவேண்டும் என்பதே பெரும் எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.(05)



காலைக்கதிர் Kalaikkathir

# விமானங்கள் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட பொதிகளிலிருந்து போதைப்பொருள் மீட்பு

விமான தபால் சேவை மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தின் களஞ்சியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட 07 பொதிகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சுமார் எட்டு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் சுங்க மற்றும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகளால் திங்கட்கிழமை கைப்பற்றப்பட்டுள்ளன.

நீண்டநாட்களாகஇந்தபொதிகளைவாங்கஉரிமையாளர்கள் வராததால் இந்த சோதனை நடாத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது -

இந்த பொதிகள் அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகளில் இருந்து இலங்கையின் பல்வேறு பகுதிகளில் உள்ள போலி முகவரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

மேலும் ,அவர்களது முகவரிகளை ஆய்வு செய்தபோது, அவை போலி முகவரிகள் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களில் 07 கிலோ 21 கிராம் ஐஸ் போதைப்பொருள், 01 கிலோ 143 கிராம் குஷ் போதைப்பொருள் மற்றும் 01 கிலோ 338 கிராம் இரசாயன போதைப்பொருள் என்பன அடங்குகின்றன.

இது தொடர்பாக, மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# நான் ஓடவுமில்லை ஒளியவுமில்லை பதுங்கியிருந்தேன் பாய்வதற்காக

## அனுஷா சந்திரசேகரன் தெரிவிப்பு



ஒரு பெண்ணாக நான் மலையகத்தை கையில் எடுக்கிறேன். மலையகத்தை சரியான முறையில் கொண்டு நடத்த வேண்டும் என்ற பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. ஆகவே தான் இம்முறை நான் மைக் சின்னத்தில் களமிறங்கி இருக்கிறேன் என ஐனநாயகக் குரல் கட்சியின் நுவரெலியா மாவட்டவேட்பாளர்அனுஷாசந்திரசேகரன்தெரிவித்தார்.

டயகம பகுதியில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில் -

இம்முறை ஐக்கிய ஜனநாயக குரல் எனும் கட்சியினூடாக மைக் சின்னத்தில் களமிறங்கி இருக்கிறேன். பல எதிர் தரப்பினர் நான் கடந்த முறை தேர்தல் கேட்டுவிட்டு ஓடி ஒளிந்துவிட்டேன் எனக் கூறுகின்றனர்.

ஆனால், அப்படியல்ல. நான் ஓடவும் இல்லை. ஒளியவுமில்லை. இதே மலையகத்தில் தலைவாக்கலையில் தான் இருக்கிறேன்.

என்னுடைய தந்தை 1989 ஆம் ஆண்டு தேர்தல் கேட்டபோது தோல்வி அடைந்தார். முதலில் அவருக்கு தோல்வி தான் கிடைத்தது. ஆரம்பகால உறுப்பினர்களுக்கு அது தெரியும்.

1994 ஆம் ஆண்டு வரை அவர் சிறையில் வைக்கப்பட்டிருந்தார் அதற்கு காரணம் அரசியல் பழிவாங்கல்.

ஒருவர் மலையகத்தில் புதிதாக உருவாக நினைத்தால் அவரை அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்துவார்கள். நான் கடந்த முறை தேர்தல் கேட்ட பிறகு எனக்கும் நிறைய அரசியல் பலி வாங்கல்கள் நடந்தன.

நமக்கு வேலை செய்தவர்களுக்கு பழிவாங்கல்கள் செய்தார்கள். அதனால் நான் அமைதியாக இருக்க வேண்டும் என்று நினைத்தேன. சில அரசியலில் சில நேரங்களில் நாம் அமைதியாக இருக்க வேண்டும். அதை தான் நானும் செய்தேன்.

நான் பதுங்கி இருந்தது பாராளுமன்றத் தேர்தல் எப்போது வரும் அதில் பாய வேண்டும் என்று நான் பதுங்கி இருந்தேன்.

என்னுடைய தந்தை அமரச் சந்திரசேகரன் அவரின் மகள் தான் புலி. புலி எப்படி ஒழிந்து கொண்டிருக்கும். அது பதுங்கி தான் இருக்கும். அதேபோன்று தான் நானும் பதுங்கி இருந்தேன்.

இப்பொழுது எனக்கான நேரம் வந்துவிட்டது. ஆகவே களமிறங்கி இருக்கிறேன். இந்த முறை மிகவும் பலமாக ஒரு கட்சியினூடாக ஒரு தேசிய கட்சியினூடாக களம் இறங்கி இருக்கிறேன்.

நான் எங்கே சென்றேன் என்று கேட்பவர்கள் மக்களுக்காக என்ன செய்தார்கள். என்ன செய்து கொடுத்தார்கள் இந்த ஐந்து வருடத்தில் அவர்கள் செய்த மாற்றம் என்ன? மலையகத்துக்கு செய்த சேவைகள் என்ன? அதே விடையம் தான் இன்னும் இருக்கிறது. எந்த மாற்றமும் நடக்கவில்லை.

பழைய உறுப்பினர்களை நம்பி நம்பி ஏமாற்றமடைந்தது போதும். நமக்கு ஒரு புதிய நாடாளுமன்ற உறுப்பினர் வேண்டும். பழைய உறுப்பினர்களால் எந்த பிரயோஜனமும் இல்லை. எந்த சேவைகளும் செய்யவும் இல்லை.

என்னுடைய தந்தை 16 வருடங்களில் 35 ஆயிரம் வீடுகள் கட்டினார். ஆனால், இவர்கள் இன்று 3500 வீடுகளை கட்டிக் கொடுத்துவிட்டு பொய் பிரசாரங்கள் செய்து கொண்டு திரிகிறார்கள். 16 வருடங்களில் தந்தை பல சேவைகளை செய்திருக்கிறார். இவர்கள் ஒரு சேவையும் செய்ததாய் தெரியவில்லை.

எம்முடைய மக்களுக்கான ஒரு மாற்றம் வேண்டும். மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். மலையக மக்களின் பிள்ளைகளின் எதிர்காலம் பாதுகாக்கப்பட வேண்டும்.

இன்னும் ஐந்து வருட காலத்தில் நான் இந்த இடத்துக்கு வரும்போது நம்மளுடைய பிள்ளைகள் இதே கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கக்கூடாது. அதற்கான ஒரு மாற்றமாக தான் நான் ஒரு பெண்ணா? தனியாக இறங்கி நிற்கிறேன்.

உங்களுடைய ஆதரவு இந்த முறை எனக்கு கிடைக்கும்



என்பதில் உறுதியாக இருக்கிறேன். உங்களுடைய பெண்கள் என்றால் எத்தனையோ் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள்.

ஆனால் ஒரு பெண்ணிடம் குடும்ப செலவுக்கு பணம் இருந்தால் அந்தப் பெண் குடும்பத்தை எவ்வளவு நன்றாக பார்த்துக் கொள்வார். அதேபோன்று தான் நானும் ஒரு பெண்ணாக இறங்கி இருக்கிறேன்.

ஒரு பெண்ணாக நான் மலையகத்தை கையில் எடுக்கிறேன். மலையகத்தை சரியான முறையில் கொண்டு நடாத்த வேண்டும் என்ற பொறுப்பு எங்களுக்கு இருக்கிறது. ஆகவே இம்முறை நான் மைக் சின்னத்தில் களமிறங்கி இருக்கிறேன்.

இளைஞர்களுக்காகவும் எதிர்கால சந்ததியினருக்காகவும் இந்தமுறைஉங்களுடையஆதரவைஎதிர்பார்த்துஇருக்கிறேன். கடந்த முறை இருந்த ஆதரவை விட இன்னும் அதிகமாக ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நான் பல இடங்களுக்குச் செல்கிறேன். அங்கே என் மீது வைத்திருக்கும் அன்பை பார்க்கிறேன். இம்முறை வெற்றி நிச்சயம் என்பதை அந்த அன்பு எனக்கு காட்டுகிறது.

என்னுடைய தந்தை இங்கிருந்து எனது மகளுக்கு வாக்களியுங்கள் என்று சொல்லியிருந்தால் நிச்சயமாக உங்களது வாக்குகளை எனக்கு வழங்கி இருப்பீர்கள்.

இன்றுதந்தைஇல்லைஆனால்தந்தைக்குஒப்பானவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அவர்களோடு இணைந்து இந்த முறை நான் வாக்கு கேட்கிறேன்.

ஆனால், உங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தை நான் பொறுப்பெடுத்து உங்களுடைய பிள்ளைகளுக்கான நல்ல கல்வியை கொடுத்து கல்வியின் மூலமாக இந்த நல்ல சமுதாயத்தை உயர்த்துவோம் என்பதை உறுதியாக சொல்கிறேன். இந்த முறை மைக் சின்னத்திற்கு உங்களுடைய ஆதரவு இருக்கும் என நம்புகின்றேன். - என்றார்.(05)

# ரஷ்ய இராணுவத்தில் இணைந்த இலங்கையரை மீட்பதில் சிக்கல்

## ஆளும்தரப்பு அறிவிப்பு

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு என்ற ரீதியில் ரஷ்ய இராணுவத்தில் இணைந்த இலங்கையர்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி வருகின்றோம். அவர்கள் உத்தியோகபூர்வமற்ற இராணுவத்தில் சட்டரீதியற்ற முறையில் இணைந்துள்ளதால் இராஜதந்திர ரீதியில் இவ்விடயத்தை அணுகுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக ஆளும்தரப்புத் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு இடம்பெற்ற போது அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

முன்னாள் முப்படை வீரர்கள் தொழில் வாய்ப்புக்காக ரஷ்ய இராணுவத்தில் இணைந்துள்ளனர். இவ்வாறு இணைந்தவர்களின் பெரும்பாலானோர் காணாமல் போயுள்ளனர். இது தொடர்பில் இலங்கையிலுள்ள ரஷ்ய தூதுவரிடம் கலந்துரையாடி இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய இவ்வாறானவர்களை மீண்டும் ரஷ்ய இராணுவத்தில் இணைத்துக் கொள்ளாமல் இருப்பதற்கும், தற்போதுகாணாமல்போயுள்ளவர்கள்தொடர்பில்தகவல்களை ஆராய்ந்து வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. யுத்தத்தின் போது காணாமல் போனவர்களை கண்டு பிடிப்பது இலகுவான விடயமல்ல. இன்று அந்த தீவிர யுத்தம் இடம்பெற்று வருகிறது.

எவ்வாறிருப்பினும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு என்ற ரீதியில் நாம் இந்த விவகாரத்தில் அவதானம் செலுத்தி வருகின்றோம். ஆனால் முழுமையான தகவல்களை குறுகிய காலத்துக்குள் வழங்க முடியும் என்று எம்மால் கூற முடியாது. எனவே முன்னர் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகளை அவ்வாறே முன்னெடுத்துச் செல்கின்றோம். அதற்கமைய இரு நாடுகளுக்கிடையிலான இராஜதந்திர தொடர்புகள் ஊடாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சட்ட ரீதியாக ரஷ்ய இராணுவத்தில் இணைந்திருந்தால் அவர்களை இலகுவாக நாட்டுக்கு அழைத்து வர முடியும். ஆனால் இவர்கள் சட்டத்துக்கு முரணாக உத்தியோகபூர்வமற்ற இராணுவத்தில் இணைந்திருப்பதால் மீட்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது இலகுவானதல்ல. - என்றார்.(05)

# ரயில்வே வேலைத்தளத்தில் இரத்மலானையில் சூடு

இரத்மலானை ரயில்வே வேலைத்தளத்தில் நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையடிக்கும் நோக்கில் 5 பேராடங்கிய குழுவினர் ரயில்வே வேலைத்தளத்திற்குள் பிரவேசித்து, அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை தாக்கி காயப்படுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது, ரயில்வே பாதுகாப்பு அதிகாரி, சந்தேக நபர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டில் சந்தேகநபர்களில் ஒருவர் காயமடைந்துள்ளதுடன் ஏனைய சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

சந்தேகநபர்களின் தாக்குதலில் காயமடைந்த ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தரும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சந்தேக நபரும் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இளம் வேட்பாளர் யாழில் உயிரிழப்பு



நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் இளம் வேட்பாளர்ஒருவர்திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளார்.

ஜனநாயக தேசியக்கூட்டணியில் தபால் பெட்டி சின்னத்தில் போட்டியிடும், வல்வெட்டித்துறை நகரசபை முன்னாள் உறுப்பினரும் உடுப்பிட்டி பகுதியை சேர்ந்தவருமான வேட்பாளரே உயிரிழந்துள்ளார்.

திடீர் சுகவீனம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

குறித்த வேட்பாளரின் மறைவிற்கு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஈஸ்டர் தாக்குதல்கள் விசாரணை செய்வதற்காக ரணில் திடீரென எதற்கு குழுக்களை நியமித்தார்?

## சந்தேகம் உள்ளதாக பேராயர் மல்கம் ரஞ்சித் தெரிவிப்பு



உயிர்த்த ஞாயிறுதாக்குதல்கள் குறித்து விசாரணை செய்வதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க நியமித்த குழுவின் விசாரணைகளின் நம்பகத்தன்மை குறித்து பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி இந்த வருடம் ஓய்வுபெற்ற நீதிபதி ஏஎன்ஜேஅல்விஸ்தலைமையில் குழுவொன்றை அமைக்க தீர்மானித்தமைக்கு என்ன காரணம் அதன் நோக்கம் என்னவென மல்கம் ரஞ்சித் கேள்வி எழுப்பியுள்ளார்.

ரணில்விக்கிரமசிங்க ஏன் இந்த குழுவை அமைத்தார் என்பது சந்தேகத்திற்குரிய விடயமாக காணப்படுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

ஷானி அபயசேகரவையும் ரவிசெனிவிரத்னவையும் அரசியல்ரீதியில் பழிவாங்குவதற்காகவே இந்த குழு அமைக்கப்பட்டதா என்பது குறித்து சந்தேகம் கொண்டுள்ளோம் என அவர் தெரிவித்துள்ளார்.

(05)

# டிஜிற்றல் பொருளாதாரத்துக்கு ஹான்ஸ் விஜயசூரிய தலைமை

## அழைப்பு விடுத்துள்ளது ஆளும்தரப்பு



அரசாங்கத்தின் உத்தேச டிஜிற்றல் பொருளாதார திட்டங்களிற்கு தலைமை தாங்குமாறு டயலொக்கின் முன்னாள் பிரதமநிறைவேற்றதிகாரி கலாநிதி ஹான்ஸ் விஜயசூர்யவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.


இதற்கு அவர் இன்னமும் பதிலளிக்கவில்லை. ஆனால் சாதகமாக பதிலளிப்பார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

டிஜிற்றல் மயப்படுத்தும் நடவடிக்கைகளிற்காக அமைச்சரவையொன்றை அரசாங்கம்உருவாக்கும்என அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

டிஜிற்றல் துறையில் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் இந்த திட்டத்தில் பங்கெடுக்குமாறு அழைக்கப்படுகின்றனர் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.(05)

# மீட்கப்பட்ட கார்களுடனான தொடர்பை நிரூபித்தால் என் அரசியலை துறப்பேன்

## ரோஹித்த அபேகுணவர்தன அறிவிப்பு



கண்டியில்மீட்கப்பட்டஇரண்டுகார்களிற்கும் தனக்கும் தொடர்பில்லை என முன்னாள் அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

தனக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் தான் அரசியலில் இருந்து விலகுவேன் என அவர் தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடியில் ஈடுபடுவதற்காக நான் அரசியலில் ஈடுபடவில்லை. இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றால் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் தகவல்களைத் தெரிவியுங்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீட்கப்பட்ட கார்கள் எனது உறவினருடையவை என தகவல்கள் வெளியாகியுள்ளன என சுட்டிக்காட்டியுள்ள முன்னாள் அமைச்சர், எனது சகா ஒருவர் தவறிழைத்தால் அது எனது தவறா நான் அதற்கு காரணமா என கேள்வி எழுப்பியுள்ளார்.

அவர் குற்றமிழைத்திருந்தால் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை சுமத்துங்கள் எனத் தெரிவித்துள்ள அவர், இரண்டு வாகனங்களிற்கும் எனக்கும் தொடர்புள்ளதாக நிரூபித்தால் நான் தேர்தலில் போட்டியிடமாட்டேன் என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ரோகித அபயகுணவர்த்தனவின் உறவினரின் வீட்டில் மறைத்துவைக்கப்பட்டிருந்த இரண்டு ஆடம்பர வாகனங்களை கண்டி குற்றத்தடுப்பு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

அனிவத்த பகுதியில் உள்ள வீடொன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த 60 மில்லியன் ரூபா பெறுமதியான பிஎம்டபில்யூ மற்றும் எஸ்யுவி ரகவாகனத்தையும் கண்டி குற்றத்தடுப்பு பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

குறிப்பிட்ட வீட்டில் வாகனத்தரிப்பிடமொன்றை சோதனையிட்டவேளை இந்த வாகனங்களை கண்டுபிடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட வாகனங்களிற்கு எவரும் உரிமை கோரவில்லை என்பதால் வாகனங்களை கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த வீட்டின் உரிமையாளர் கண்டியில் வாகன விற்பனையில் ஈடுபட்டுள்ளார், ரோகித அபயகுணவர்த்தன துறைமுகங்கள் விவகாரத்திற்கான அமைச்சராக பணியாற்றியவேளை இவர் துறைமுக அதிகாரசபையில் அதிகாரியாக பணியாற்றியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த இரண்டு வாகனங்களையும் துறைமுகத்திலிருந்து சட்டவிரோதமாக கொண்டுவந்திருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார் இரண்டு வாகனங்களையும் அரசாங்க பகுப்பாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

### கொழும்புத் துறைமுக

# கிழக்கு முனையத்தை விசேட திட்டமாக அறிவிப்பதற்கு அமைச்சரவை தீர்மானம்



இலங்கை துறைமுக அதிகாரசபையால் கொழும்பு தெற்கு துறைமுகக் கருத்திட்டத்தின் கிழக்குக் கொள்கலன் முனையத்தை கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்வதற்கு துறைமுக அதிகாரசபைக்கு முழுமையான உரித்துடன் கூடிய கொள்கலன் முனையமாக இயக்குவதற்கு கடந்த 2021 பெப்ரவரி முதலாம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த சிவில் வேலைகளுக்கான ஒப்பந்தம் தற்போது வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த கொள்கலன் முனையத்திற்குத் தேவையான பாரந்தூக்கிகளைக் கொள்வனவு செய்வதற்கான பெறுகையும் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

கொழும்புதுறைமுகத்தின்தனியார்கொள்கலன்இயக்குபவர்கள் மற்றும் சேவை வழங்குநர்களுக்கு மூலோபாய அபிவிருத்திச் சட்டம் மற்றும் முதலீட்டு சபைச் சட்டத்தின் கீழ் காணப்படும் பல்வேறுபட்ட வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த விடயங்களைக் கருத்தில் கொண்டு கிழக்கு கொள்கலன் முனையக் கருத்திட்டத்தை 'விசேட கருத்திட்டமாக' நிதி விடயதான அமைச்சரால் வெளியிடுவதற்காக போக்குவரத்து, அதிவேகவீதி, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.(05)

# 50 துப்பாக்கிகள் மாத்திரமே மீளக் கையளிக்கப்பட்டன

### பாதுகாப்பு அமைச்சு தகவல்

கடந்த காலங்களில் பொதுமக்களுக்கு பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளில் சுமார் 50 துப்பாக்கிகளே மீளக் கையளிக்கப்பட்டுள்ளன என பாதுகாப்பு அமைச்சின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களில் பொதுமக்களுக்கு 1,650 துப்பாக்கிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டன.

பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருள்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தது.

துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருள்கள் வெலிசறையில் உள்ள அரசாங்கத்தின் வர்த்தக வெடிபொருள் களஞ்சியசாலையில் ஒப்படைக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

உரியதிகதிக்குமுன்னர்துப்பாக்கிகள்மற்றும் வெடிமருந்துகளை ஒப்படைக்காவிட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

(05)

# தபால் ஊழியர்களின் விடுமுறைகள் ரத்து

தபால் ஊழியர்களின் விடுமுறை பொதுத் தேர்தல் முடியும் வரை இரத்து செய்யப்பட்டுள்ளதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, நேற்று (புதன்கிழமை) முதல் நவம்பர் 14 ஆம் திகதி வரை அனைத்து ஊழியர்களின் விடுமுறையையும் இரத்து செய்யப்பட்டுள்ளதாக பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க குறிப் பிட்டார்.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.10.2024இல் வெளியிடப்பெற்றது